කඳුරට නව ගම්මාන,යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

# 2018

# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report











# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

# 2018

කඳුරට නව ගම්මාන,යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு
Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

**කාර්යසාධන වාර්තාව 2018**
**செயலாற்றுகை அறிக்கை 2018**
# Performance Report 2018

කඳුරට නව ගම්මාන, යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය
மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு
Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

P. Box 562, No. 45, St. Michael's Road, Colombo 03.
Telephone: 0112541369  Fax 0112 328 117
Email : secretary@mhnv.gov.lk / mhplanning2016@gmail.com
Web site : www.mhnv.gov.lk

# செயலாற்றுகை அறிக்கை

# 2018



කඳුරට නව ගම්මාන,යටිතල පහසුකම් හා ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය

மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

Ministry of Hill Country New Villages, Infrastructure and Community Development

# தொலைநோக்கு

பெருந்தோட்டத்துறை சமூகத்தை ஏனைய
சமூகங்களுடன் சரிசமமாக இருக்கும் வகையில்
கௌரவம், சுயமரியாதை மற்றும்
சமூக அந்தஸ்துடன் கூடிய
ஒரு கிராமிய சமூகமாக நிலைமாற்றுதல்

# குறிக்கோள்

வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும்
சமூகப் பொருளாதார வசதிகளை
முன்னேற்றுவதனூடாக
பெருந்தோட்டத்துறைச் சமூகத்தின்
நலன்களை மேம்படுத்தல்.





மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

## கௌரவ பழனி திகாம்பரம்

2018ஆம் ஆண்டு 32ம் இலக்கபாராளுமன்றச் சட்டத்தின் படி பெருந்தோட்ட பிராந்தியத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையை உருவாக்குவதன் மூலம் நிறுவன வலுவூட்டல் மற்றும் சமூக அபிவிருத்தி முன்னோக்குகளிலிருந்து 2018 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஒன்றாக பதிவு செய்யப்படுகிறது. அதிகாரசபை உருவாக்கத்தின் மூலம் அமைச்சின் நிர்வாக திறன் அதிகரித்துள்ள அதேவேளை லயன் அறைகளில் வாழ்ந்த பெருந்தோட்டச் சமூகம் அந்தஸ்துடனும் வலுவுடனும் வாழ்வதற்குரிய தனி வீடுகளின் உரிமையாளராக நிலைமாறுகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.

உள்நாட்டு நிதி மற்றும் இந்திய மானிய உதவி மூலம் தனி வீடுகளை கட்டி எழுப்பிய வருடமாக இவ் வருடம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. கடந்த 3 வருடங்களில் 4000இற்கும் மேற்பட்ட வீடுகள் பெருந்தோட்ட பிராந்தியத்தில் பல மாவட்டங்களிலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 2017ம் ஆண்டில் வாக்குறுதி அளிக்கபட்ட 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டுள்ளது, மேலும் 4000 வீடுகள் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இச் சமுதாயத்திற்கான வீடுகளை வழங்குவதில் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். முதல் நிலையில், 4000 வீடுகள் இரண்டு கட்டங்களாக பூர்த்தி செய்யப்பட்டன. முதல் கட்டத்தில் 1113 வீடுகளும் இரண்டாம் கட்டத்தில் மிகுதி 2887 வீடுகளும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இரண்டாம் நிலையில் 10,000 வீடுகளுக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கான தெளிவான காணி உறுதி ஊடாக சட்டரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகள் உறுதியளிக்கப்பட்டமை இவ்வாண்டின் சிறந்த பெறுபேறாகும். 2018ஆம் ஆண்டில் 808 வீடுகளின் உரிமையாளர்களுக்கான காணி உரித்துப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ் விடயத்தில் எதிர்நோக்கிய ஆரம்ப தடைகள் முறியடிக்கப்பட்டு காணி உறுதி பத்திரங்கள் வழங்குதல் சீரமைக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், அமைச்சானது அணுகு வழி பாதைகள், வைத்தியசாலை பாதைகள் மற்றும் குடிநீர் வசதிகள், பழுதடைந்த லயன் அறைகளுக்கு கூரைத்தகடுகளை வழங்கி புனரமைத்தல் மற்றும் சுகாதார மலசல கூடங்கள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கும் முன்னுரிமை வழங்கியது. மேலும் உலக வங்கியின் உதவியுடன் 17 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன் 35 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

சமுதாய அபிவிருத்தியை நோக்கும் பொழுது, இவ்வாண்டில் சுகாதாரம் மற்றும் போசாக்கு மேம்பாடு, போதைப்பொருள் பாவனைய-லிருந்து முற்பாதுகாப்பு, சூழல் மற்றும் நீர்நிலைகள் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளும் இவ்வாண்டு ஒக்டோபர் 26ம் திகதி அரசியல் ஆட்சி மாற்றம் காரணமாக பின்னடைவை எதிர்நோக்கின. இத்துரதிஸ்ட நிகழ்வு இடம்பெறாதிருந்திருந்தால் தற்போதைய பெறுபேற்றை விட அதிக அளவிலான பெறுபேற்றை பெறக்கூடியதாக இருந்திருக்கும். எவ்வாறெனினும், அதிகாரசபை நடைமுறைப்படுத்தவிருக்கும் செயற்பாடுகள் ஊடாக, நிர்வாகத்திறனை மேம்படுத்தி இச்சமூகத்தை ஏனைய சமூகங்களுடன் சமநிலையில் பேணுவதான அமைச்சின் தூரநோக்கை அடைந்துக்கொள்ள முடியும்.

**பழனி திகாம்பரம் பா.உ.**
**மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்**



## செயலாளரின்  ஆசிச் செய்தி...

இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் நலன்கள் கிட்டுகின்ற சுபீட்சமிக்க பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்குடன், “ ஏ 2025 வளமிக்க தேசம்“ எனும் அரசாங்க தொலைநோக்கினை யதார்த்தமாக மாற்றியமைக்கும் பொருட்டு, வறுமையில் வாடுகின்ற பெருந்தோட்ட சமூகத்தினரின் சமூக பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து, கடந்த சில ஆண்டுகளாக இவ் அமைச்சு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றது.

ஆகக் குறைந்த வசதிகளுடன் கூடிய லயன் வீடுகளை தமது வாழ்விடங்களாக கொண்ட பெருந்தோட்ட மக்களுக்காக, “புதியதோர் கிராமிய எண்ணக்கருவை“ அறிமுகப்படுத்தி,அதன் கீழ் அனைத்து வசதிகளுடனும் கூடிய வீடு மற்றும் 07 பர்ச்சஸ் எதுவித சிக்கலுமற்ற காணி உறுதியை வழங்கி, அபிமானத்துடனும், கௌரவமாகவும் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய சமூகமொன்றாக அவர்கள் அவர்களை விளங்கச் செய்வதற்கான ஓர் சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கு முடிந்தமையானது இவ் அமைச்சு பெற்ற பெரு வெற்றியாகும்.

கல்விஇ சுகாதாரம், குடிநீர், சுகாதார வசதிகள், நுழைவுப் பாதைகள் உட்பட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி போன்றே பெருந்தோட்ட சமூகத்தினரிடையே நிலவுகின்ற வறுமையை ஒழிப்பதற்கும், அவர்களது போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு இவ் அமைச்சு செயலாற்றி வந்துள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலின் கீழ், தேசிய போசாக்கு செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட போசாக்கு குறித்த பல்முனைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, பெருந்தோட்டப் பிரதேசங்களில் சிறுவர் மந்தபோசாக்கினை இல்லாதொழித்து “ரிக்கிரி“ போசாக்கு இணைப்பிதழை பெருந்தோட்ட பிரதேசங்களில் 40,000 இற்கு அதிகமான பிள்ளைகளுக்கு வழங்கக் கிடைத்தமையையிட்டு இவ் அமைச்சு பெருமிதமடைகின்றது.

அதிமேதகு சனாதிபதியினால் கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட “கிராம சக்தி“ முயற்சியாண்மைக்கு நிகராக, “புதியதோர் பெருந்தோட்ட கிராமங்களின் வீடுகளைப் பெற்றுக் கொண்ட பயனாளி குடும்பங்களை மையமாக கொண்டு அவர்களது வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு ஏற்றுமதியை இலக்காக கொண்ட ஒருங்கிணைந்த விவாசாய துறைகளை உருவாக்குவதற்கும், அவர்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை விஸ்தரிப்பதற்கும் போதிய திட்டங்கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளன. பெருந்தோட்ட மக்கள், பெருந்தோட்ட துறைசார் தொழில்களை விட்டு விலகிச் செல்வதனால் தற்போது பெருந்தோட்டத்துறையில் முகங்கொடுக்க நேர்ந்துள்ள தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கும்,
அப் பிரதேசங்களில் நிலவுகின்ற வேலையில்லாப் பிரச்சினையை மட்டுப்படுத்துவதற்கும் பெருந்தோட்ட மக்களுக்கு மிகச் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்குவதற்கும் இதனூடாக வாய்ப்புக் கிட்டுகின்றது எனலாம்.

பொறியியலாளர் (கலாநிதி) பீ. சுரேஷ்
செயலாளர்
மலைநாட்டு புதிய கிராமங்கள்இ உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு

# உள்ளடக்கம்


1. அறிமுகம்
2. அமைச்சை ஸ்தாபித்தல்
3. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பும் தற்போதைய பதவியணியினரும்
4. அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் முன்னுரிமைகளும்
   - 4.1. அபிவிருத்தி அணுகுமுறை
   - 4.2. அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும்
5. 2018 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடும் நிதி முன்னேற்றமும்
6. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்
   - 6.1. மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்
   - 6.2. பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி
   - 6.3. வாழ்வாதார அபிவிருத்தி
7. வாழ்வாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல் - 2018 ஆண்டின் மேம்பாடு
8. அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விசேட வெற்றிகள்
9. அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்
   - 9.1. பெருந்தோட்ட வலயத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை
   - 9.2. பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம
   - 9.3. பிரஜாசக்தி கண்காணிப்பு நிலையம்

10 இணைப்பு

11 அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான புகைப்படங்கள்

# 1.அறிமுகம்

இரு நூற்றாண்டுகால வரலாற்றுக்கு உரிமை கூறும் இலங்கை பெருந்தோட்ட சமுதாயத்தினரின் ஆரம்பமானது இந்நாடு பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலம்வரை நீண்டு செல்கின்றது. பிரித்தானியர்களினால் 1840 இல் மலையகத்தில் கோப்பிப் பயிர்செய்கைக்காக தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்ட இவர்கள் கோப்பிப் பயிர்ச்செய்கை அழிவடைந்ததை அடுத்து ஏற்படுத்தப்பட்ட தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கைகளை மையமாகக் கொண்டு விசேடமான தனிமைப்பட்ட ஒரு இனப்பிரிவினராக வளர்ச்சியடைந்துள்ளனர்.

லயன் அறைகளைக் கொண்ட வரிசையாக அமைந்த வீடுகளை தமது இருப்பிடமாகக் கொண்டு மிகவும் வறிய தொழிலாளர்களின் வாழ்க்கை முறைக்கு உரிமை கூறும் இவர்களை மனித அபிவிருத்திச் சுட்டிகள் (நகர மற்றும் கிராமிய) உடன் ஒப்பிடும்போது ஏனைய இனப்பிரிவினர்களைவிட கணிசமான சமூக முரண்பாடுகளை எதிர்கொண்டிருப்பதை அவதானிக்க முடியும். தேசிய சமூக அபிவிருத்தி சுட்டிகளுடன் ஒப்பிடும் போது இம்மக்களின் சமூக அபிவிருத்தி சுட்டிகள் மிகவும் பின்னடைவையே காட்டுகின்றன.

பெருந்தோட்ட மக்கள் இலங்கையின் மொத்த சனத்தொகையில் 5% பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். பெருந்தோட்ட பிரதேசங்களில் 1.1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை ஒரு மில்லியனுக்கு அதிகமான மக்கள் ஓர் சிறிய காணித்துண்டொன்றிற்கு கூட உரிமையில்லாத நிலையில் இப்பிரதேசங்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

## 1.1. பெருந்தோட்டத்துறை பற்றிய பிரதான தரவுகள் (தேயிலை சிறுபற்றுநிலங்கள் தவிர)

### 1.1.1. காணிகள் தொடர்பான விபரங்கள

- பெருந்தோட்ட கம்பனிகளின் எண்ணிக்கை- 23
- தோட்டங்களின் எண்ணிக்கை- 453
- மொத்த நிலப்பரப்பு 280,034 ஹெக்டெயார்
    - தேயிலை - 80,637 ஹெக்டெயார்
    - இறப்பர் - 45,881 ஹெக்டெயார்
    - தென்னை - 9,482 ஹெக்டெயார்
    - பயிரிடப்படாத நிலப்பரப்பு - 117,275 ஹெக்டெயார்

(மூலம்:- Annual Health Return, பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் (பெ.ம.அ.நி2014)

### 1.1.2. பெருந்தோட்ட சனத்தொகை விபரங்கள்

மொத்த சனத்தொகை - 943,390

| மாவட்டம் | நுவரெலியா | பதுளை | கண்டி | இரத்தினபுரி | காலி | கேகாலை |
|---|---|---|---|---|---|---|
| சனத்தொகை | 408,052 | 164,735 | 91,310 | 106,531 | 19,895 | 60,112 |

| மாவட்டம் | மொனராகலை | மாததளை | களுத்துறை | மாத்தறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| சனத்தொகை | 9,084 | 20,449 | 39,455 | 23,767 | 943,390 |

மூலம் - சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் / பதிவாளர் நாயகம் திணைக்களம் - 2018

## 1.1.3 வீடமைப்பு, குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள்

| வீடமைப்பு – தற்போதைய நிலை | | |
|---|---|---|
| | வீடுகளின் எண்ணிக்கை | வீதம் |
| மேம்படுத்தப்பட்ட வீடுகள் | 35,027 | 15.8% |
| | | |
| இரட்டை வீடுகள் | 28,062 | |
| ஒற்றை லைன் வீடுகள | 73,539 | |
| இரட்டை லைன் வீடுகள | 69,613 | |
| தற்காலிக குடியிருப்புகள் | 13,814 | |
| மாடி லைன் வீடுகள் | 1,270 | |
| **தேவைப்படும் வீடுகளின் எண்ணிக்கை** | 186,298 | 84.2% |
| **மொத்த வீடுகள்** | 221,325 | 100 % |

| குடிநீர் வசதிகள் - தற்போதைய நிலை | | |
|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதம் |
| குடும்பங்களின் எண்ணிக்கை | 256,545 | |
| | | |
| வசதிகளைப் பெறும் குடும்பங்கள் | 142,765 | 55.6% |
| குடிநீர் வசதிகள் தேவைப்படும் குடும்பங்கள் | 113,780 | 44.4% |

| துப்புரவேற்பாட்டு வசதிகள் - தற்போதைய நிலை | | |
|---|---|---|
| | குடும்பங்களின் எண்ணிக்கை | வீதம் |
| குடும்பங்களின் எண்ணிக்கை | 256,545 | |
| | | |
| வசதிகளைப் பெறும் குடும்பங்கள | 138,257 | 53.9 % |
| குடிநீர் வசதிகள் தேவைப்படும் குடும்பங்கள் | 118,288 | 46.1 % |

மூலம்:- Annual Health Return, (பெ.ம.அ.நி 2016)

## 1.1.4 சுகாதாரம் மற்றும் போசாக்கு

**(கிராமிய, நகர்ப்புற மற்றும் தேசிய மட்டங்களுடன் ஒப்பிடும் போது 5 வயதுக்கு குறைந்த தோட்ட சிறுவர்களின் போசாக்கு நிலைமை)**

| சுகாதார சனத்தொகை மதிப்பீடு- 2016 / 2017 | | | | |
|---|---|---|---|---|
| **சுட்டிகள்** | **பிரிவுகள்** | | | **தேசிய %** |
| | தோட்ட % | கிராம % | நகர % | |
| **5 வயதிற்கு குறைவான பிள்ளைகள்** | | | | |
| **குள்ளமான (வயதுக்கேற்ற உயரம்)** | 31.7 | 17.0 | 14.7 | **17.3** |
| **நிறை குறைந்த (வயதுக்கேற்ற நிறை)** | 29.7 | 20.8 | 16.4 | **20.5** |
| **பலவீனமான(வயதுக்கேற்ற பருமன்)** | 13.4 | 15.6 | 12.9 | **15.1** |

மூலம்:- சனத்தொகை சுகாதார மீளாய்வு அறிக்கை 2016/2017.

# 2. அமைச்சை ஸ்தாபித்தல்

## 2.1. பின்னணி

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான விசேட வெளியீட்டின் 25 ஆம் பிரிவிற்கும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 17,23,24 ஆம் பிரிவுகளுக்கும், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 11 (1) பிரிவிற்கும் அமைவாக உணவு, உடை, உறையுள் மற்றும் சுகாதார பாதுகாப்பு, தேவையான சமூக பாதுகாப்பும் கொண்டு தன்னுடையதும் தனது குடும்பத்தினதும் சுகாதாரத்திற்கும் நலனுக்கும் தேவையான வாழ்க்கை முறையை அனுபவிப்பதற்கும், தன்னால் கட்டுப்படுத்த முடியாத இடர்களின் போது பாதுகாப்பைப் பெறுவதற்கும், முழுமையான ஓர் மனிதனின் உருவாக்கத்திற்கான தனிமையையும், தனிமையை அனுபவிப்பதற்கான உரிமையும் சகல மனிதனுக்கும் உரித்தாகவுள்ளது.

இலங்கையும் தனது அரசியலமைப்புச் சட்டத்தின் 10,11,13,14 ஆம் சரத்துக்களில் இவ்வுரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் சகல மக்கள் கூட்டத்திற்கும் இவ்வனைத்து பிரதான சேவைகளையும் வசதிகளையும் அனுபவிக்கும் உரிமையையும் பெற்றுக்கொடுக்கும் பாரிய பொறுப்பை பல தசாப்தங்களாக மேற்கொண்டுவருகின்றது.

தென்னிந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டு இலங்கையின் மத்திய, ஊவா, சப்பிரகமுவ மாகாணங்களில் குடியமர்த்தப்பட்டு சமூக, பொருளாதா மற்றும் கலாசார ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட சமுதாயம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிகாலத்தில் இருந்தே பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தங்கி வாழ்ந்ததால் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அடிப்படை சேவைகளை அரிதாகவே அனுபவித்து வந்தது.

இதன் விளைவாக இருநூற்றாண்டுகளாக இலங்கையின் தேசிய வருமானத்திற்காக பெரும் பங்காற்றிய மக்களுக்கு இவ்வரப்பிரசாதங்கள் கிடைப்பதற்கு தாமதமாகியது. அரச மற்றும் தனியார் துறையில் காணப்படும் சட்டத்திட்டங்களின் சில பொருந்தா தன்மைகள் காரணமாக 1 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தனியார் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் தமது வாழ்க்கையை தொடர்கின்றனர். இவ்வாறானதொரு மக்கள் சமுதாயத்திற்கு உரிய சேவைகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்தி செய்து அச் சமுதாயத்தின் சமூக அபிவிருத்தியை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துக் கொள்வதற்காக சரியானதொரு பொறிமுறையை உருவாக்குவதற்கான தேவை காணப்பட்டது.

## 2.2. அமைச்சை ஸ்தாபித்தல்

அதற்கமைய பெருந்தோட்ட சமுதாயத்தினர் இதுவரை காலமும் எதிர்நோக்கிய சமூக முரண்பாடுகளை ஒழித்து ஏனைய இனங்களுக்கு சமமான சமூக அந்தஸ்து, கௌரவம்,மற்றும் சுயமரியாதையைக் கொண்ட கிராமிய சமுதாயமாக வளர்ச்சியுறச் செய்யும் நோக்கத்துடன் புதிய அணுகுமுறையின் கீழ் தற்போதைய புதிய அரசாங்கமானது, ஆட்சிக்கு வந்ததை அடுத்து 2015.09.25 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1933/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையின் மூலம் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தாபிக்கப்பட்டது.

## 2.3. பிரதான கடமைகள்

- அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளல் தொழில்புரியும் காணி உரிமை இல்லாத லயன் வீடுகளில் வசிக்கும் பெருந் தோட்ட மக்களுக்கு வீடுகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதறகாக புதிய கிராமங்கள் / நகராக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- பெருந்தோட்ட சமுதாயத்தை வலுவூட்டுவதற்காக வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
- பெருந்தோட்ட சமுதாயத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக மேன்மையடையச் செய்வதற்கான அடிப்படை வசதிகள் உள்ளடங்கலாக ஏனைய அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுத
- கிராமிய மற்றும் பெருந்தோட்ட துறையில் உட்கட்டமைப்பு வசதிகளை அபவிருத்தி செய்தல்.

## 2.4. கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

**மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு**

- பெருந்தோட்ட வலயங்கள் தொடர்பான புதிய கிராம அபிவிருத்தி அதிகாரசபை
- பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்
- தொண்டமான் தொழில் பயிற்சி நிலையம் - ஹட்டன்
- கலாசார நிலையம் - ரம்பொட
- நோர்வுட் விளையாட்டுத்தொகுதி
- பிரஜா சக்தி செயற்திட்ட நிலையம்(E- KIOSK Centers)

# 3 அமைச்சின் நிறுவகக் கட்டமைப்பு மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

## 3.1 2018.12.31 அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

| தொ இல | பதவி | சேவை | தரம் / வகுப்பு | அங்கிகரிக்கப் பட்ட பதவியணி | | உள்ளபடி பதவியணி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | நிரந் | அமைய / ஒப்பந் | நிரந் | அமை |
| 1. | செயலாளர் | இ.நி.சேவை | விசேட | 1 | - | 1 | - |
| 2. | மேலதிக செயலாளர் | இ.நி.சேவை | விசேட | 2 | - | 2 | - |
| 3. | சிரேஸ்ட உதவி செயலாளர் | இ.நி.சேவை | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 4. | பணிப்பாளர் | இ.நி.சேவை | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 5. | பணிப்பாளர் | இ.தி.சேவை | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 6. | பணிப்பாளர் | இ.பொ.சே சேவை | வகுப்பு I | 1 | - | - | - |
| 7. | பிரதான கணக்காளர் | இ.க.சேவை | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 8. | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சேவை | வகுப்பு I | 1 | - | 1 | - |
| 9. | உதவி செயலாளர் | இ.நி.சேவை | வகுப்புII /III | 1 | - | 1 | - |
| 10. | உதவி பணிப்பாளர் | இ.நி.சேவை | வகுப்புII /III | 3 | - | 1 | - |
| 11. | உதவி பணிப்பாளர் | இ.தி.சேவை | வகுப்புII /III | 2 | - | 2 | - |
| 12. | உதவி பணிப்பாளர் | இ.பொ.சே சேவை | வகுப்புII /III | 2 | - | 1 | - |
| 13. | கணக்காளர் | இ.க.சேவை | வகுப்புII /III | 2 | - | - | - |
| 14. | சட்ட அலுவலர் | சட்ட அலுவலர் சேவை | வகுப்புII /III | 1 | - | - | - |
| 15. | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ. சேவை | அதியுயர் தரம் | 1 | - | - | 1 |
| 16. | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.மற்றும் தொ. | II/I | 1 | - | - | - |
| 17. | மொழிப்பொயர்ப்பாளர் | மொழிபெயர்ப்பாளர் சேவை | வகுப்புI / II | 2 | - | - | - |
| 18. | புள்ளி விபரவியல் உத்தியோகத்தர | | | 1 | - | 1 | - |
| 19. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | இ.இ.அ..சேவை | வகுப்புI/II/III | 19 | - | 12 | - |
| 20. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இ.தொ.சேவை | வகுப்புI/II/III | 8 | - | - | 4 |
| 21. | செயலாளரின் இணைப்புச் செயலாளர் | தற்காலிகம் | | - | 1 | - | 1 |
| 22. | தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | இ.தொ.மற்றும் தொ. | 3- III/II/I | 2 | - | - | - |
| 23. | அரச முகாமைத்துவ உத்தியோகத்தர் | அ.மு.சே | வகுப்புI/II/III | 25 | - | 16 | - |
| 24. | பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிப்பாளர் | அமைச்சுக்கான | | 225 | - | 150 | - |
| 25. | புகைப்பட கலைஞர் | தற்காலிகம் | | - | 1 | - | 1 |
| 26. | வீடியோ கெமரா கலைஞர் | தற்காலிகம் | | - | 1 | - | 1 |
| 27. | புகைப்பட உதவியாளர் | தற்காலிகம் | | - | 1 | - | 1 |
| 28. | சாரதிகள் | இணைந்த சாரதி சேவை | I/II/IIIவிசேட | 17 | - | 9 | - |
| 29. | அலுவலக உதவியாளர் | அலுவலக உதவியாளர் | I/II/IIIவிசேட | 16 | - | 12 | - |
| | மொத்தம் | | | 337 | 4 | 213 | 9 |

# 3.2 அமைச்சின் பதவியணி நிறுவகக் கட்டமைப்பு

## 3.2

மலைநாட்டு புதிய கிராமங்கள்இ உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு

**அமைச்சின் பதவியணி நிறுவாகக் கட்டமைப்பு (2018.12.31 திகதிக்கு)**



# 3.3 2018.12.31 திகதிக்கு அமைச்சரின் அலுவலகத்தில் பணிப்புரியும் பணியாட்க்கள் விபரம்

| இல | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | எம். வாமதேவன் | அமைச்சரின் ஆலோசகர் |
| 2. | பிரசாந்த் மகேந்திரராஜா | பிரத்தியேக செயலாளர் |
| 3. | கணபதி நகுலேஸ்வரன் | இணைப்புச் செயலாளர் |
| 4. | ரோகன விதானகே | இணைப்புச் செயலாளர் |
| 5. | அருன ரத்னாயக | ஊடகச் செயலாளர் |
| 6. | பழனி விஜயகுமார் | மக்கள் தொடர்பாடல் அதிகாரி |
| 7. | எஸ். கமலதாசன் | தனிப்பட்ட உதவியாளர் |
| 8. | வி.ஜே.எஸ். அந்திக் | முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | ஜே.எ.என்.பி.ஜயசுந்தர | முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | விஸ்வநாதன் பிரவீனா | முகாமைத்துவ உதவியாளர் |
| 11. | லங்காஜீவனிஅலுத்கே | முகாமைத்துவ உதவியாளர் |
| 12. | செபஸ்த்தியன் அந்தனிராஜ் | முகாமைத்துவ உதவியாளர் |
| 13. | டி.எம்.எம்.திஸாநாயக | வீடியோ கலைஞர் |
| 14. | பழனி தங்கவேலு | கமரா உதவியாளர் |
| 15. | சி. தீபன் பிரசாந்த் | புகைப்பட கலைஞர் |
| 16. | ஏ. சன்முகநாதன் | சாரதி |
| 17. | ஆர்.விஸ்வலிங்கம் | சாரதி |
| 18. | டி.ரஜினிகாந்த் | சாரதி |
| 19. | புலேந்திர குமார் | சாரதி |
| 20. | பி. சதீசன் | சாரதி |
| 21. | டி.எம்.சமன் பிரதீப் | சாரதி |
| 22. | பரமகுரு சிவகுமார் | சாரதி |
| 23. | ஜேசுதாசன் வனதாஸ் | சாரதி |
| 24. | கே. வெங்கடேஸ்வரன் | சாரதி |
| 25. | எஸ். லினோத் பிரசாத் | அலுவலக உதவியாளர் |
| 26. | விநாயகமூர்த்தி தினேஸ்குமார் | அலுவலக உதவியாளர் |

## 3.4 அமைச்சின் ஒவ்வொரு பிரிவினதும் பணிகள் மற்றும் பொறுப்புக்கள்

### 3.4.1 செயலாளரின் பிரிவு

அமைச்சின் தலைவரும், அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருமான செயலாளரின் கீழ் செயலாளரின் பிரிவு இயங்குவதுடன் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள விசேட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கும், செயலாளருக்கும் அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், கூட்டங்களை ஏற்பாடு செய்தல், ஏனைய அமைச்சுக்களுடனும் வெளிநாட்டு நிறுவனங்களுடனும் தொடர்பை ஏற்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் இப்பிரிவினால் பிரதானமாக நிறைவேற்றப்படுகின்றது.

#### 3.4.1.1 2018.12.31 செயலாளரின் பிரிவின் பதவியணி பற்றிய விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. சீ.ஐ.ஏ. விஜேநாயக்க | செயலாளரின் இணைப்புச் செயலாளர் |
| 2 | திரு. ஜே. பிரதீப் | அலுவலக உதவியாளர் |
| 3 | திருமதி. டப்.என்.என்.கே.சில்வா | அலுவலக உதவியாளர் |
| | | |

### 3.4.2 நிர்வாகப் பிரிவு

பெருந்தோட்ட மக்கள் சமுதாயத்திற்காக அமைச்சினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களை குறித்த காலப்பகுதியினுள் நிறைவு செய்வது தொடர்பாக தேவையான அமைச்சின் நிறுவக கட்டமைப்பினை வடிவமைத்தல், புதிய பதவிகளை உருவாக்குதல், புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளல், பயிற்சி வழங்கல் உட்பட அமைச்சின் மனிதவளத்தை விருத்தி செய்தல் மற்றும் செயற்படுத்தல் என்பன நிர்வாக பிரிவின் பிரதான பணிப்பொறுப்புகளாகும். இவற்றிற்கு மேலதிகமாக,

- அமைச்சின் சாதாரண நிர்வாகம்
- உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஏனைய நிறுவக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பிரத்தியேக கோவைகளைப் பேணல்
- அமைச்சின் பதவியணியினர் தொடர்பான விபரங்களை இற்றைப்படுத்துதல் மற்றும் தேவையான நிறுவனங்களுக்கு வழங்குதல்
- உத்தியோத்தர்களின் விடுமுறை குறித்த பதிவேடுகள், கோவைகளைப் பேணல
- உத்தியோத்தர்களின் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
- அமைச்சின் வாகனத் தொகுதி மற்றும் வாகனங்களைப் பேணல்.
- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல், ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் இணைப்பை ஏற்படுத்துதல்

  தாபனவிதிக் கோவை, நிதிப் பிரமாணம், சுற்றறிக்கைகள் மற்றும் வேறு கட்டளைச்சட்டங்களுக்கு அமைய பணியாட்தொகுதியை வழிநடத்துதல் போன்ற செயற்பாடுகள் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.4.2.1 2018.12.31திகதிய நிர்வாகப் பிரிவின் பணியாட்தொகுதி விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திருமதி. ஏ.எஸ்.த. மெல் | மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) |
| 2. | திருமதி. வாசுகி | சிரேஷ்ட உதவிச் செயலாளர் |
| 3. | திருமதி. கே.கே.பீ. சிரோமி ரத்நாயக | உதவிச் செயலாளர் (நிர்வாகம்) |
| 4. | திரு. சரத் சந்திரசிறி | நிர்வாக உத்தியோகத்தர் |
| 5. | திரு. பீ.எச்.என். ராஜகருணா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 6. | திருமதி. ஜே.எம்.ஜீ.ஐ.எம். ஜயசிங்க | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 7. | செல்வி. டீ.பீ.எம்.சீ.எச். தர்மராஜ | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 8. | திருமதி. கே.டீ.கே. கங்கா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 9. | திரு. கே.எம்.பீ.கே. குலசேகர | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 10. | திருமதி. பீ.டப்.எஸ். அயேஷா | பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 11. | திரு. ஐ.என்.டீ. குமாரகே | பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 12. | திரு. எல். அபேகுணசேகர | சாரதி |
| 13. | திரு. எஸ். ஊதயசிறி | சாரதி |
| 14. | திரு. எம்.எஸ். புஷ்பகுமார | சாரதி |
| 15. | திரு. எச்.ஏ.என். ஹத்தசிங்க | சாரதி |
| 16. | திரு. எம். ஜெயராம் | சாரதி |
| 17. | திரு. எஸ். நிலந்த குமார | சாரதி |
| 18. | திரு. வை.பீ.எஸ். செனரத் | சாரதி |
| 19. | திரு. பிரேமதிலக் | சாரதி |
| 20. | திரு. ரீ.ஜீ.எல்.எஸ். அபேசேகர | சாரதி |
| 21. | திரு. என்.பீ.ஜீ,எல்.எல்.கே. குமார | அலுவலக உதவியாளர் |
| 22. | திரு. கே. துஷாந்த | அலுவலக உதவியாளர் |
| 23. | திரு. கே.எஸ். குமார | அலுவலக உதவியாளர் |
| 24. | திரு. ஆர். வினோத் குமார் | அலுவலக உதவியாளர் |

## 3.4.3 அபிவிருத்தி பிரிவு

பெருந்தோட்டத்துறை மக்களின் நலன்புரி விடயங்கள், அவர்களின் வாழ்விடம், வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக பொருளாதார வசதிகளை மேம்படுத்தவது தொடர்பாக அமைச்சு 5 கூறுகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டுவருகின்றது. அமைச்சு, அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச சபைகளின் ஊடாக இச்செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது. இச்செயற்றிட்டங்களை கண்காணித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பான அனைத்துப் பொறுப்புகளையும் உள்ளடக்கி அரசாங்கத்தின் திரட்டு நிதி மற்றும் இந்திய அரசாங்கத்தின் நன்கொடையை பயன்படுத்தி அமைச்சின் நோக்கங்களையும்

இலக்குகளையும் அடைவதற்கான பிரதான செயற்பாடுகள் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்செயற்பாடுகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு பொறியியல் பிரிவு பெரும் பங்களிப்பை வழங்கிவருதுடன் அபிவிருத்தி பிரிவினால் பின்வரும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல், கள கண்காணிப்புச் விஜயங்களை மேற்கொள்ளல், குறித்த கொடுப்பனவுகளுக்கு பரிந்துரைத்தல், நிதி மற்றும் பௌதீக மேம்பாடு குறித்து உரிய பிரிவுகளுக்கு அறிக்கையிடல்.
- பொறியியல் மதிப்பீடுகள், செயற்றிட்ட வழிகாட்டிகள் மற்றும் குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் என்பவற்றைத் தயாரித்தல்
- பிரஜாசக்தி கண்காணிப்பு பிரிவு, பிரஜாசக்தி நிலையங்கள், பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையம், இறம்பொடை கலாசார நிலையம் மற்றும் நோர்வூட் விளையாட்டுத் தொகுதி போன்றவற்றை நிர்வகித்தல்
- பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தல்

### 3.4.3.1 2018.12.31 திகதிய அபிவிருத்திப் பிரிவின் பணியாட்தொகுதி விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | திரு. ஜே.டி.எஸ்.பீ. பெரேரா | மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) |
| 2. | திருமதி. வீ. நாமகள் | பணிப்பாளர் அபிவிருத்தி |
| 3. | திரு. கே.எம்.எச். பண்டார | உதவிப் பணிப்பாளர் (பொறியியல்) |
| 4. | செல்வி யூ.எல். ஜயசுந்தர | உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு) |
| 5. | திருமதி கே. பிரதீபா | உதவிப் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு வசதி) |
| 6. | திருமதி. டப்.சீ.கே. வடுகே | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 7. | திரு. எஸ். அருள்நாதன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 8. | திருமதி பீ.பி. ஹிரண்யா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 9. | திருமதி டப்.சீ.ஜே. பெரேரா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 10. | திருமதி கே. குகநதி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 11. | செல்வி எம்.எம். குணரத்ன | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| 12. | செல்வி என்.பீ.பீ.ரி. விமலதாச | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| 13. | திரு. எஸ்.மணிவண்ணன் | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| 14. | திரு. எஸ். தினேஷ் | தொழிநுட்ப உத்தியோகத்தர் |
| 15. | திரு. டப்.சீ. பெரேரா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 16. | செல்வி கே. நித்யா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 17. | செல்வி. எம்.எச். ஷபீனா | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 18. | செல்வி ஜே.என்.எஸ். ஜயசிங்க | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 19. | செல்வி எம்.எம்.எஸ்.எம். சமரநாயக | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 20. | செல்வி டப்.எம்.எஸ் சஞ்சீவனி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 21. | திரு. ஜீ. சந்திரகுமார் | பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 22. | திருமதி ஆர்.எம்.எஸ். லசந்த | அலுவலக உதவியாளர் |
| 23. | திருமதி வீ. ஞானராஜ் | அலுவலக உதவியாளர் |

### 3.4.3.2 அபிவிருத்திப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் 2018 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் 2018.12.31 ஆந் திகதியளவில் மேம்பாடு

| | நிகழ்ச்சிகள் | நிதி ஒதுக்கீடு (ரூ.மி) | | 2018.12.31இல் மேம்பாடு (ரூ.மி.) | |
|---|---|---|---|---|---|
| | | உள்நாடு | இந்திய உதவி | உள்நாடு | இந்திய உதவி |
| 01 | வாழ்வாதார அபிவிருத்தி | 100 | - | 51.44 | - |
| 02 | பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 500 | - | 370.21 | - |
| 03 | தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி (மலைநாட்டு புதிய கிராமங்கள் தொடர்பான வீடமைப்பு) | 2,000 | - | 1,175.96 | |
| 04 | இந்திய அரசாங்கத்தின் நன்கொடையுடன் ஹட்டன் பூல்பேங்க் தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்தல் | 15 | 94 | 1.43 | - |
| 05 | இந்திய நன்கொடையுடனான வீடமைப்புத் திட்டம் | 90 | 587 | 64.29 | 587 |
| | மொத்தம் | **2,705** | **681** | **1,663** | **587** |
| | முழு மொத்தம் | **3,386** | | **2,250.33** | |

## 3.4.4 திட்டமிடல் பிரிவு

அமைச்சின் குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவான பின்வரும் செயற்பாடுகள் திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல் அதற்கமைய அமைச்சின் வருடாந்த செயலாற்றுகைத் திட்டத்தை தயாரித்தல்,
- அமைச்சின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மூலதன மதிப்பீடுகளை தயாரித்தல்.
- தேசிய செயலாற்றுகைத் திட்டத்தை (2016 – 2020) நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்
- புதிய அபிவிருத்தி செயற்றிட்டங்களை இனம்காணல், செயற்றிட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயாரித்தல்.
- செயற்றிட்டங்களை செயற்படுத்தல், மதிப்பீடு செய்தல்,கள விஜயம், முன்னேற்ற மீளாய்வு, நிதி முன்னேற்றம் மற்றும் பௌதீக முன்னேற்றம் உள்ளடங்கிய முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தல்.
- அமைச்சின் இணையதளத்தை இற்றைவரைப்படுத்துவதற்குரிய தகவல்களை வழங்குதல்
- அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்
- இதுவரை பெரும் குறைபாடாக காணப்பட்ட பெருந்தோட்ட துறைசார்ந்த விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான தரவுத் தளம் அமைத்தல், தரவுகளை சேகரித்தல் மற்றும் இற்றைவரைப்படுத்துதல்.

### 3.4.4.1 2018.12.31 திகதிய திட்டமிடல் பிரிவின் பணியாட்தொகுதி விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | செல்வி கே.டீ. அனோஜா முனசிங்க | பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 02 | திருமதி ரி.டி. வங்கமுவ | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) |
| 03 | திரு. ஜீ.எம்.வை.டீ.த சில்வா | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் |
| 04 | திருமதி கே.டீ.கே த சில்வா | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 05 | திருமதி ஜே.ஏ.ஏ.என். ஜயசூரிய | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 06 | திரு. பிரசாந் | பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 07 | திரு. சிவபெருமாள் | அலுவலக உதவியாளர் |

## 3.4.5 கணக்குகள் பிரிவு

அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்களையும் சேவைகளையும் பெறுகைச் செயற்பாட்டினூடாக வழங்குதல், சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளை வழங்குதல், அபிவிருத்தி செயற்பாடுகள் சார்ந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல், பேணல், அரசாங்க நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்கும் பொறுப்பாக இருப்பது கணக்குப் பிரிவாகும்

### 3.4.5.1 2018.12.31திகதிய கணக்குகள் பிரிவின் பணியாட்தொகுதி விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி. ஆர்.எம்.எஷ். வசந்தா | பிரதான கணக்காளர் |
| 02 | திருமதி என். மனோகரன் | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 03 | திரு. கே.டீ.டப்.எச்.என்.டீ.ஜீ.ஆர்.பீ. திவாரத்ன | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 04 | திரு. எச்.ஜீ.எம்.எல். நிரோஷினி | அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 05 | திருமதி ஏ.ஆர்.ராஜேந்திரம் | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 06 | செல்வி டப்.எம்.டப்.ஜீ.என்.ஏ. பிரேமரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 07 | செல்வி எஸ்.பீ.வை.எம்.என்.எஸ். சிவரத்ன | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 08 | செல்வி எச்.பீ.ஐ.எஸ். விக்ரமசிங்க | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 09 | செல்வி டீ.என்.எல்.என். தனஞ்சினி | அரச முகாமைத்துவ உதவியாளர் |
| 10 | செல்வி கே.ஜீவாகயத்ரி | அலுவலக உதவியாளர் |
| 11 | திரு. கே. தினேஷ் குமார் | அலுவலக உதவியாளர் |
| 12 | திரு. டப்.என்.என்.கே. சில்வா | அலுவலக உதவியாளர் |

## 3.4.6 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக காணப்படும் உள்ளக கட்டமைப்பை கண்காணிப்பதுடன் குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக காணப்படுகின்ற உள்ளக பரிசீலனைகள் தொடர்பான முறைகள் பற்றி தொடர்ச்சியாக கண்காணித்தல், வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் உத்தேச திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல், முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் குறித்த விடயங்களை தெரிவிப்பதும், கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக விடையளிப்பதும் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.4.6.1 2018.12.31திகதிய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியாட்தொகுதி விபரம்

| தொ. இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு கே.ஜீ.எஸ்.டப். வீரக்கொடி | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| 02 | திரு. எம். மனோஜ்காந் | பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 03 | திருமதி பி வனராஜா | பெருந்தோட்ட மக்கள் தொடர்பாடல் வசதியளிப்பாளர் |
| 04 | செல்வி எஸ்.என். விஜேசூரிய | அலுவலக உதவியாளர் |

# 4 அமைச்சின் அபிவிருத்தி அணுகுமுறைகளும் செயற்திட்ட அமுல்படுத்தற் பொறிமுறையும்

## 4.1 அபிவிருத்தி அணுகுமுறைகள்

பெருந்தோட்ட மக்கள் இதுவரை முகம்கொடுத்து வந்த சமூக முரண்பாடுகளை நீக்கி அவர்களை கௌரவமான கிராமிய சமூகமாக பரிணமிக்கச் செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு தோட்டப் பகுதிகளை மையமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற சுமார் 250,000 குடும்பங்களைச் சேர்ந்த (ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட சனத்தொகையை கொண்ட) தோட்டப்புற மக்களது சமூக, பொருளாதார அபிவிருத்தியை முறையான திசைமுகப்படுத்தலின் ஊடாகவும் சிறந்த மேற்பார்வையுடனும் மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள ஐந்து ஆண்டு தேசிய செயற்பாட்டுத் திட்டம் (2016-2020) தயாரிக்கப்பட்டு இவ் அமைச்சினால் அமுல்படுத்தப்படுகின்றது.

இதனூடாக முன்னுரிமையளிக்கப்பட்டுள்ள வீடமைப்பு, குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள், சுகாதாரம் மற்றம் போசாக்கு, கல்வி மற்றும் ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி, தொழிற் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி. சமூக வலுவூட்டல் போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய பிரதான அமைச்சுக்கள்,மாகாண அமைச்சுக்கள் ஆகிய அனைத்து நிறுவனங்களினதும் பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு பெருந்தோட்ட சமுதாயத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தியை வலுவூட்டுவதற்காக, இவ்வமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை எந்தவிதமான தடைகளும் இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

.

### 4.1.2 அமைச்சின் முன்னுரிமைகள்

1. **மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு**
   - பசும் பொன் வீடமைப்பு
   - இந்திய நன்கொடையுடனான வீடுகள்
2. **பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி**
   - லயன் வீடுகளின் கூரைகளை மீளப்பொருத்துதல் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, விசேட செயற்றிட்டங்கள்
   - குடிநீர் வசதிகளை வழங்குதல்
   - சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை மேம்படுத்தல்
   - ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, விசேட செயற்றிட்டங்கள்
3. **வாழ்வாதார அபிவிருத்தி**
   - திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி
   - சமூக வலுவூட்டல்

# 4.2 அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவகக் கட்டமைப்பும்

## 4.2.1 கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறை

அமைச்சினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் முக்கிய செயற்பணி அமைச்சின் விடயப்பரப்புக்குள் அடங்கும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாகவும் அதற்கு மேலதிகமாக பிரஜாசக்தி செயற்பாட்டு நிலையம், மாவட்ட/பிரதேச செயலகங்களின் ஊடாகவும் பிரதேச சபைகளின் ஊடாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## 4.2.2 அபிவிருத்தி கருத்திட்டங்களை அமுல்படுத்தும் பொறிமுறையும் நிறுவனக் கட்டமைப்பும்

| முன்னுரிமைகள் அமுல்படுத்தும் நிறுவனம் | முன்னுரிமைகள் அமுல்படுத்தும் நிறுவனம் |
|---|---|
| (1) மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு<br>(i) பசும் பொன் வீடமைப்புத்திட்டம்<br>(ii) இந்திய உதவியுடனான வீடமைப் த்திட்டம் | - பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பு நிதியம் (PHDT),தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் மற்றும் வீடமைப்புப் பயனாளிகள்<br>- UNHABITAT, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மனிதவள குடியிருப்பு அமைப்பு, தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், பயனாளிகள்,பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் (PHDT) |
| (2) பின்தங்கிய பிரதேசங்களில் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்<br>(I) லயன் அறைகளுக்கு கூரைகளை பொருத்துதல்<br>(II) குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்<br>(III) துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்<br>(IV) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்<br>(V) ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் (அடைவுப் பாதைகள் / மின்சாரம்)<br>(VI) விசேட கருத்திட்டங்கள் (சமயம் / கலாசாரம்) | - பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்(PHDT) , மாவட்ட / பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் |
| (3) வாழ்வாதார அபிவிருத்த<br>(I) திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி<br>(II) சமூக வலுவூட்டல்<br>(III) சுகாதாரமும் போசாக்கும் | - தொண்டமான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் பிரஜாசக்தி அபிவிருத்தி நிலையம்<br>- பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி பொறுப்பு நிதியம்,பிரஜாசக்தி நிலையம், பிரதேச வைத்தியர் பணிமனை மற்றும் பிரதேச செயலகம்/ மாவட்ட செயலகங்கள் மற்றும் "பெருந்தோட்ட சமுதாய தொடர்பாடல் வசதியளிக்கும் அலுவலர்கள்" மூலம் |

## 4.2.3 நிறுவனக் கட்டமைப்பு



# 5 2018 ஆண்டுக்கான ஒதுக்கீடும் நிதி முன்னேற்றமும்

## 5.1 2018 ஆண்டுக்கான ஒதுக்கீடு

| செலவு விடய இல | செலவு விடயம் | மீண்டுவரும் ரூ.. '000 | மூலதன ரூ.. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| **நிர்வாகம் மற்றும் செயற்பாடு** | | | | |
| **140-01-01** | அமைச்சரின் காரியாலயம் | 27,475 | 7,206 | **34,681** |
| **140-01-02** | அமைச்சின் நிர்வாகம் மற்றும் தாபனச் சேவை | 318,900 | 13,500 | **332,400** |
| | உப மொத்தம் | **346,375** | **20,706** | **367,081** |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | | |
| **140-02-04** | 1. கிராமிய பிரதேசங்களில் வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | - | 100,000 | 100,000 |
| | 2. பின்தங்கிய பிரதேசங்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்தி | - | 500,000 | 500,000 |
| | 3. பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி (மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்)<br>4. (பாதீட்டு முன்மொழிவுகள் அடங்கலாக) | - | 2,000,000 | 2,000,000 |
| | 5. பூல்பேங்க, ஹட்டனில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல்<br>**(13)**<br>**(17)** | -<br>- | 94,000<br>15,000 | 94,000<br>15,000 |
| | இந்திய நன்கொடை வீடமைப்புத்திட்டம்<br>**(13)**<br>**(17)** | - | 90,000<br>587,000 | 90,000<br>587,000 |
| | அபிவிருத்தி விடயங்களின் மொத்தம் | - | 3,386,000 | 3,386,000 |
| | மொத்த ஒதுக்கீடு (வெளிநாட்டு ஒதுக்கீடுகளும் உள்ளடங்கலாக) | **346,375** | **3,404,706** | **3,753,081** |

## 5.2 2018.12.31 திகதியில் அமைச்சின் செலவினப் பொழிப்பு

### 5.2.1 அமைச்சின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினப் பொழிப்பு

| | பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31 இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| | அமைச்சின் நிர்வாக மற்றும் செயற்பாட்டுச் செலவினம் | | | |
| I | அமைச்சரின் பணியாட்தொகுதி | | | |
| 1 | ஆளுக்குரிய வேதனாதிகள் | 14,975 | 12,913 | 86% |
| 2 | சாதாரண நிர்வாகம் | 12,500 | 11,764 | 94% |
| 3 (1+2) | மீண்டுவரும் செலவுகளின் மொத்தம் | 27.475 | 24.677 | 90% |
| 4 | செயற்பாட்டு மூலதனச் செலவினம் | 7,206 | 6,630 | 92% |
| 5 (3+4) | அமைச்சரின் பணியாட்தொகுதியின் முழு மொத்தச் செலவினம் | 34,681 | 31,307 | 90% |
| II | அமைச்சின் பணியாட்தொகுதி | | | |
| 6 | ஆளுக்குரிய வேதனாதிகள் | 116,900 | 109,605 | 94% |
| 7 | சாதாரண நிர்வாகம் | 202,000 | 182,015 | 90% |
| 8 (6+7) | மீண்டுவரும் செலவுகளின் மொத்தம் | 324,900 | 291,620 | 91% |
| 9 | செயற்பாட்டு மூலதனச் செலவினம் | 13,500 | 10,861 | 80% |
| 10 (8+9) | அமைச்சின் பணியாட்தொகுதியின் முழு மொத்தச் செலவினம் | 332,400 | 302,481 | 91% |
| 11 (5+10) | அமைச்சின் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளின் முழு மொத்தம் | 367,081 | 333,788 | 91% |

## 5.2.2 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் செலவினப் பொழிப்பு

| | பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | | | |
| I | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (அரச ஒதுக்கீட்டுடன்) | | | |
| 1 | வாழ்வாதார மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | 100,000 | 51,440 | 51% |
| 2 | பின்தங்கிய பிரதேசங்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்தி | 500,000 | 370,210 | 74% |
| 3 | மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு | 2,000,000 | *1,175,960 | 59% |
| 4 | இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்(17) | 90,000 | 64,294 | 71% |
| 5 | ஹட்டன் - தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல் (17) | 15,000 | 1,433 | 10% |
| 6 (1+5 | மொத்தம் | 2,705,000 | 1,663,336 | 61% |
| | | | | |
| II | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (இந்திய அரசின் உதவியுடன்) | | | |
| 7 | இந்திய அரசின் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்(13) | 587,000 | *587,000 | 100% |
| 8 | ஹட்டன் - தொழிற்பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல் (13) | 94,000 | - | - |
| 9 (7+8) | மொத்தம் | 681,000 | *587,000 | 86% |
| | | | | |
| 10 (6+9) | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முழு மொத்தம் | 3,386,000 | 2,250,336 | 66% |

அரச கணக்குகள் அறிக்கைக்கு அமைய இந்திய அரசின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான கிரயம் ரூபா 587 மில்லியன் என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், இந்திய உயர்ஸ்தானியகராலயத்தினால் அனுப்பப்பட்ட நிதி அறிக்கைக்கு அமைய அக் கிரயம் ரூபா 932 மில்லியன் என குறிப்பிட்டுள்ளது. அதற்கமைய கணக்குக் கூற்றுக்கள் தொடர்பாக உள்ளபடியாக செலவினை உள்ளடக்கும் வகையில் கணக்குகள் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 5.2.3 மூலதன செலவினப் பொழிப்பு

| | பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018ஆண்டிற் கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31 இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | அமைச்சரின் ஆளணி மற்றும் அமைச்சின் செயற்பாட்டு மூலதனச் செலவினம் | 20,706 | 17,491 | 84% |
| 2 | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (உள்நாட்டு நிதியம்) | 2,705,000 | 1,663,336 | 61% |
| 3 | அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் (வெளிநாட்டு நிதியம்) | 681,000 | 587,000 | 86% |
| | | | | |
| | முழு மொத்தம் | 3,406,706 | 2,250,336 | 66% |

## 5.2.4 மீண்டுவரும் செலவினப் பொழிப்பு

| | பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018ஆண்டிற் கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31 இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| | அமைச்சின் நிர்வாக மற்றும் செயற்பாட்டுச் செலவினம் | | | |
| | | | | |
| 1 | அமைச்சரின் பணியாட்தொகுதியருக்கான மீண்டுவரும் செலவினம் | 27,475 | 24,677 | 90% |
| | | | | |
| 2 | அமைச்சின் பணியாட்தொகுதியருக்கான மீண்டுவரும் செலவினம் | 318,900 | 291,620 | 91% |
| | | | | |
| | மொத்த மீண்டுவரும் செலவினம் | 346,375 | 316,297 | 91% |

## 5.2.5. அமைச்சின் முழு மொத்த செலவினப் பொழிப்பு

| | பிரிவு / நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | 2018ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | **மீண்டுவரும் செலவினம்** | 346,375 | 316,297 | 91% |
| | **மூலதனனச் செலவினம்** | | | |
| 2 | செயற்பாடு | 20,706 | 17,491 | 84% |
| 3 | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (உள்நாட்டு நிதியம்) | 2,705,000 | 1,663,336 | 61% |
| | | | | |
| 4 (1+2+3) | **மொத்த உள்நாட்டு நிதியம்** | **3,072,081** | **1,997,124** | 65% |
| | | | | |
| 5 | **வெளிநாட்டு நிதியம் (அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்)** | **681,000** | **587,000** | **86%** |
| | | | | |
| 6 (4+5) | முழு மொத்தச் செலவினம் | 3,753,081 | 2,584,124 | 69% |

# 6 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

## 6.1 மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடுகள்

இருப்பிடங்கள் தொடர்பான சுட்டிகளை கவனத்தில் கொள்ளும்போது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இனப்பிரிவினராக பெருந்தோட்ட சமுதாயத்தினரை கவனத்தில் கொள்ளலாம். பெருந்தோட்ட சமுதாயத்தினர் வாழ்ந்துவரும் வீடுகளில் 58% ற்கும் மேற்பட்டவை வரிசையாக அமைந்த "லயன் அறைகளாக" காணப்படுகின்றன. (தேசிய ரீதியாக நோக்கும்போது இவ்வாறான வீடுகளின் விகிதம் 3.8% ஆகும்). இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தானிய தோட்ட முகாமைத்துவத்தினரால் தோட்டத் தொழிலாளர்களுக்காக அமைக்கப்பட்ட மிகப் பழமையான இந்த லயன் வீடுகள் தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. சூரிய ஒளி, காற்று குறைவாக காணப்படுதல், அதிக நெரிசல், தனிப்பட்ட சுதந்திரம் இன்மை, பல குடும்பங்கள் ஒரே அறையில் வாழ வேண்டிய நிலையினால் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக வேண்டிய நிலை, பாதுகாப்பற்ற தன்மை, சமூக அங்கீகாரம் இன்மை, சுகாதாரம் மற்றும் சிறுவர்களின் கல்விக்கு பொருத்தமில்லாத சூழல் காணப்படுதல் போன்ற பலவேறு சமூக பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

**பெருந்தோட்டத் துறையில் இவ்வாறான 3 விதமான வீடுகள் அரசாங்கத்தினால் இனங் காணப்பட்டுள்ளது.**

### 1 ஒற்றை வரிசை லயன் அறைகள் ( Single Line Houses )

முன் வரண்டாவுடன் கூடிய அறையை உள்ளடக்கியது. வராண்டா 25 ($ft^2$) சதுர அடியைக் கொண்டதாகும். லயன் அறைகள் 264சதுர அடி பரப்பளவை கொண்டவை. வராண்டா, அறை மற்றும் சிறிய சமையலறை என்பன உள்ளடங்குகின்றன. ( சில அறைகள் இதையும் விட சிறியவை) பெருந்தோட்டத் துறையில் இது போன்ற 11,599 ஒற்றை வரிசை லயன்கள் இருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில் 73,539 வீடுகள் உள்ளடங்கும். 81,900 இற்கும் அதிகமான குடும்பங்கள் இவ்வீடுகளில் வசிக்கின்றனர்

### 2 இரட்டை வரிசை லயன் அறைகள்(Double Line Houses )

முன் வராந்தாவுடன் கூடிய முன்பக்க, பின்பக்க குடியிருப்புகள் ஒவ்வொரு லயன் அறை குடியிருப்பும் 10-12 அறைகளை கொண்டிருக்கும். இங்கு 02 குடும்பங்கள் வசிக்கின்றன. பரப்பளவு 145-175 ($ft^2$) சதுர அடியைக் கொண்டதாகும். தற்போது இவ்வாறான லயன்கள் 5,468 காணப்படும் அதேவேளை அதில் 69,613 வீடுகளும் 76,305குடும்பங்களும் உள்ளடங்குகின்றன.

### 3 தற்காலிக குடியிருப்புகள்

பெருந்தோட்டத் துறையில் படிப்படியாக சனத்தொகை அதிகரிப்பதனால் அங்கு காணப்படும் லயன் அறைகள் அவர்கள் வாழ்வதற்கு போதாத காரணத்தினால் அவற்றுடன் இணைந்ததாக காணப்படும் காணிகளில் தற்காலிக வீடுகளை அமைத்துள்ளனர். கூரைத்தகடுகள், பொலித்தீனைப் பயன்படுத்தி அமைக்கப்படும் இத்தற்காலிக வீடுகள் மிகவும் குறைந்த வசதிகளுடன் காணப்படும். இவ்வாறான 13,814 தற்காலிக வீடுகளில் 14,500 இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன.

மூலம்: (பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதிய தரவு மீளாய்வு,2016)

வதிவிடங்கள் தொடர்பாக பெருந்தோட்ட மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து அவர்களை சுயகௌரவத்துடன் வாழக்கூடிய உரிமையை பெற்றுக்கொடுக்கும் அபிலாசையுடன் அரசினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைய ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் "புதிய வாழ்க்கை" வீடமைப்பு திட்டம் எனவும்,2015 இல் அரசாங்கத்தின் 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் விசேட செயற்றிட்டமாகவும் செயற்படுத்தப்பட்டது.

இவ் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 2016 ஆண்டில் இருந்து "பசும் பொன் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்" என நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அது ஒப்பந்த அடிப்படையிலும் பயனாளிகளை அடிப்படையாக கொண்டும் இரு வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறே இவ் அமைச்சினால் புதிய வீடுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் வலுப்படுத்துமுகமாக வெளிநாட்டு ஒத்துழைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் பங்குடைமையையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மண்சரிவு அபாயங்களுக்கு உள்ளான பெருந்தோட்டங்களில் வசிக்கும் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி இப்புதிய வீடுகளை பெற்றுக்கொடுப்பதுடன் அவ்வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், அடைவுப் பாதைகள் என்பவற்றை பெற்றுக்கொடுக்கும் செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீட்டுறுதியை மாத்திரமன்றி, காணியுறுதியையும் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் புதிய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை சார்ந்த தீர்மானமொன்றின் அடிப்படையில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும் காணி அமைச்சும் ஒன்றிணைந்து பயனாளிகளுக்கு சிக்கலற்ற காணியுறுதி அமைச்சினால் வழங்கப்படுவதுடன் அதன் முதலாவது கட்டம், அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2017 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்வாண்டில் நுவரெலியா மற்றும் காலி மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 446 குடும்பங்கள் தொடர்பாக சிக்கலற்ற உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆண்டில் நுவரெலியா, காலி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 808 குடும்பங்களுக்கு வீட்டுரிமை மற்றும் சிக்கலற்ற உறுதிகள் வழங்கப்பட்டன. அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஒவ்வொரு வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பாகவும் உறுதிகள், அமைச்சரவையின் தீர்மானத்திற்கமைய கட்டம் கட்டமாக வழங்கப்படுவதுடன், இது வரை உள்நாட்டு நிதியங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் 5,562 வீடுகள் மற்றும் இந்திய உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் 14,000 வீடுகளுக்கு உரித்து உறுதிகள் வழங்குவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## 6.1.a அமைச்சின் ஊடாக 2018 ஆண்டு வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரங்களின் விபரம்

| பிரதேச செயலகம் | தோட்டத்தின் பெயர் | பிரிவு | வழங்கப்பட்ட உறுதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| **இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட காணி உரிதிப்பத்திரங்கள்** | | | | |
| நுவரெலியா | வூட்வில் | ப்ரன்கடன் | 71 | |
| | அல்பியன் | யுசனடயற | 7 | |
| | கோட்லொஜ் | கோட்லொஜ | 19 | |
| | டெஸ்போட் | | 23 | |
| | க்லரன்டம் | | 9 | |
| | நுவரெலியா | கீழ் | 11 | |
| | கொன்கோடியா | மேல் | 2 | |
| | டொரிங்டன் | ஸ்டெயார் | 11 | |
| | ராகல | மத்திய | 29 | |
| | குயின்ஸ்பெரி | | 23 | |
| | சீன் | மேல் | 11 | |
| ஹட்டன் | யுனிபீல்ட் | யுனிபீல்ட் | 14 | |
| | பம்பரகலை | ரான்வத்த | 18 | |
| | | பம்பரகலை | 14 | |
| | பிரவுன்ஸ்விக் | பிரவுன்ஸ்விக் | 20 | |
| | ஸ்டொனிகிலிப் | ரொசிட்டா | 21 | |
| | கிரஸ்டலெஸ்பாம் | கிரஸ்டலெஸ்பாம் | 15 | |
| | இன்ஜஸ்ட்ரி | பெருட் | 20 | |
| | மொக்கா | மித்லொக்கின் | 20 | |
| | ஸ்ட்ரெதஸ்பி | மின்னா | 12 | |
| | திக்ஓயா | தரவாலை | 21 | |
| | கிவ் | சென்ஜான் டில்லரி | 5 | |
| | கௌரவலை | | 10 | |
| | கெனில்வத்த | | 2 | |
| பதுளை | அம்பிட்டிகந்த | கீழ் | 50 | |
| காலி | வுலான்மடுவ | මේන් | 25 | |
| | சிட்றஸ் | நாக்குடும்பிய | 12 | |
| | பொஜஸ்டர் | கோடின்ன | 6 | |
| | பல்லேகொட | மேல் | 8 | |
| | கிகியாகந்த | மேற்கு | 23 | |
| | அல்பிட்டிய | கிகுல்விட்டிகல | 19 | |
| | தலன்கல்ல | Besjour | 15 | |
| | ஹோமதொல | இல.1 | 13 | |
| | வல்பிட் | வவுலாகல | 22 | **601** |
| **இந்திய வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட காணி உறுதிப்பத்திரங்கள்** | | | | |
| நுவரெலியா | டெனிஸ்வத்த | | 207 | 207 |
| **மொத்தம்** | | | **808** | **808** |

## 6.1.b 2018 ஆண்டில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி முன்னேற்றம்

| | நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | | 2018ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.12.31இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | உள்நாட்டு நிதியம் மீது செயற்படுத்தப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 11 | 2,000 | 1,176 | 59% |
| 2 | இந்திய நிதியளிப்பு மீது செயற்படுத்தப்படும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 13 | 587 | *587 | 100% |
| | | 17 | 90 | 64 | 71% |
| | **மொத்தம்** | | **2,677** | **1,827** | **68%** |

## 6.1.1 புதிய கிராமம் எண்ணகருவின் கீழ் "பசும் பொன்"வீடமைப்புத் திட்டம் (Green Gold)

அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட "பசும் பொன்" வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2018 ஆண்டில்1,566வீடுகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ் வீடுகளின் சுவர்மட்ட வரை நிறைவு செய்வதை நோக்காக கொண்டு அது தொடர்பாக ரூபா 450 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 571 வீடுகள் முதற் கட்டத்திலும,995 வீடுகள் இரண்டாம் கட்டத்திலும் அமுல்படுத்தப்படுகின்றன. ***அவ்வாறே ஹரித ரண் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2018 ஆண்டு தொடர்பாக முடிவுறாதிருந்த மேலும் 2,567 வீடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் போதிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவது தொடர்பாக ரூபா 1,500 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய 2016 ஆண்டில் முடிவுறாதிருந்த 440 வீடுகளுள் 15 வீடுகள் மற்றும் 2017 ஆண்டில் முடிவுறாதிருந்த 2,127 வீடுகளுள் 844 வீடுகளின் நிர்மாணிப்பு வேலைகள் 2018 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டன. அவ்வறே 2016 ஆண் ஆண்டில் புதிய வாழும் வீடுகள் உத்தேச திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டது. காணிப் பிரச்சினைகள் காரணமாக வேலைகளை ஆரம்பிக்காதிருந்த ஸரெலன்பேக் தோட்டத்தில் நிர்மாணிக்கப்படும் 40 வீடுகளின் நிர்மாணிப்பு வேலைகள் இவ்வாண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.***

நுவரெலியா, ஹட்டன், கேகாலை, இரத்தினபுரி, கண்டி மற்றும் காலி ஆகிய பெருந்தோட்ட பிராந்தியங்களையும் உள்ளடக்கிய வீடொன்றின் பெறுமதி ரூ.1,000,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 48% அரசாங்கத்தின் நன்கொடையாகவும் 52% கடன் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றது. மண்சரிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகள் முழுமையான நன்கொடையாக வழங்கப்படுகின்றது.நீர், மின்சாரம், அடைவுப் பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்பாக வீடொன்றுக்கு 200,000 ஒதுக்கப்படும். அதற்கமைய ஒரு வீட்டின் பெறுமதி ரூபா 1,200,000.00 என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 6.1.1.1 "பசும் பொன் " வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 2018 ஆண்டில் நடைமுறைப்படுத்தும் பொருட்டு பிராந்திய மட்டத்தில் ஒதுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் பௌதீக மேம்பாடு

| பிராந்திய அலுவலகம் | 2018 புதிய வீடமைப்பு முதலாவது கட்டம் | 2018 புதிய வீடமைப்பு இரண்டாவது | 2017 ஆண்டில் முடிவுறா வீடுகள் | 2016 ஆண்டில் முடிவுறா வீடுகள் | மொத்த வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முடிவுறுத்தப்படும் | நடைமுறைப்படுத்தப் படுகின்ற |
| காலி | 35 | 50 | 252 | 05 | **342** | 46 | 296 |
| இரத்தினபுரி | 30 | 55 | 238 | 47 | **370** | 69 | 301 |
| பதுளை | - | - | 290 | - | **290** | 204 | 86 |
| கேகாலை | 38 | 61 | 82 | 68 | **249** | 77 | 172 |
| கண்டி | 58 | 85 | 218 | 40 | **401** | 101 | 300 |
| ஹட்டன் | 235 | 480 | 651 | 151 | **1,517** | 220 | 1,297 |
| நுவரெலியா | 175 | 264 | 396 | 129 | **964** | 127 | 837 |
| | | | | | | | |
| **உப மொத்தம்** | **571** | **995** | **2,127** | **440** | **4,133** | **844** | **3,289** |
| **முழு மொத்தம்** | **4,133** | | | | **4,133** | **4,133** | |

## 6.1.2 இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புத் திட்டம்

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இச்செயற்றிட்டத்தின் ஊடாக 4000 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளது. வீடொன்றிற்கான செலவு ரூபா 1 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ள இச்செயற்றிட்டத்தில் இந்திய அரசாங்கத்தால் ரூ. 950,000 உம், அதற்குரிய பெருந்தோட்டக் கம்பனியினால் ரூ. 30,000 உம், பயனாளியினால் ரூ.20,000 உம் வழங்கப்படுகின்றது. இவ்வீடமைப்புத் திட்டத்திற்கு தேவையான குடிநீர் வசதி, மின்சாரம், அடைவுப் பாதைகள் உள்ளடங்கிய ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது. அதற்கமைய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2018ஆண்டிற்காக ரூ. 90மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை இந்திய அரசாங்கத்தினால் ரூ. 587மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச் செயற்திட்டத்தின் முதற் கட்டம் இரு படிமுறைகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுவதுடன்,1,134 வீடுகள் மற்றும் இரண்டாவது படிமுறையின் கீழ் 2,866 வீடுகள் நிர்மாணிக்க வேண்டியிருந்த போதிலும், காணிப் பிரச்சினை, தாமதம் காரணமாக முதலாவது படிமுறையின் கீழ் நிர்மாணிக்கப்பட வேண்டியிருந்த 21 வீட்டு அலகுகளும் இரண்டாவது படிமுறையில் உள்ளடக்கப்பட்டது. அதற்கமைய முதலாவது படிமுறை தொடர்பாக 1,113 வீடுகள் மற்றும் இரண்டாவது படிமுறை தொடர்பாக 2,887 வீட்டு அலகுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வீடமைப்பிற்காக ரூபா 354 மில்லியன் 2017 ஆண்டில் செலவிடப்பட்டதுடன் முதலாவது படிமுறையில் 100 வீட்டு அலகுகளின் வேலைகள் அவ் ஆண்டிலேயே முடிவுறுத்தப்பட்டன. 2018 ஆண்டில் முதலாவது படிமுறையில் எஞ்சிய 1,013 வீடுகளினதும் நிர்மாணிப்பு வேலைகளை முடிவுறுத்துவதற்கும் இரண்டாவது படிமுறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 2,887 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கும் ஆரம்பித்து அத்திவார மட்டம் வரை வடிவமைப்பதற்கு அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் ரூபா 90 மில்லியன் தொகையும் இந்திய ஏற்பாடாக ரூபா 587 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.1.2.1 இந்திய அரசின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்பு செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம்

| ஒதுக்கீடு | தலைப்பு | 2018ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ(ரூ.'000) | 2018.09.30 இல் செலவு (ரூ.'000) | செலவு விகிதம் % |
|---|---|---|---|---|
| **இந்திய அரசின் உதவி** | (13) | 587,000 | 587,000 | 100% |
| **அரச ஒதுக்கீடு** | (17) | 90,000 | 64,294 | 71% |
| | முழு மொத்தம் | **677,000** | **651,294** | **96%** |

### 6.1.2.2 முதலாவது கட்டம் (Phase 01)

முதற்கட்டமாக நிர்மாணிக்கப்படும் 1,113 வீட்டு அலகுகளுள் 100 வீடுகள் 2017 ஆண்டில் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 1,013 வீட்டு அலகுகளுள் 2018 ஆண்டிறுதியில் 651 வீட்டு அலகுகளை நிறைவு செய்து மேலும் 180 வீட்டு அலகுகளின் நிர்மாணிப்புக்கள் இறுதிக்கட்டம் வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 182 வீட்டு அலகுகளின் நிர்மாணிப்புக்கள் பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றது. இது தொடர்பாக அரச ஏற்பாடுகளின் கீழ் ரூபா 64.5 மில்லியன் மற்றும் இந்திய அரசின் நிதி ஏற்பாட்டின் கீழ் ரூபா 932 மில்லியன் 2018 ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.

### 6.1.2.3 "இந்திய அரசின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படும்" வீடமைப்புச் செயற்திட்டத்தின் முதலாவது படிமுறையின் பௌதீக மேம்பாடு(2018.12.31 இல்)

| பௌதீக மேம்பாடு | பெருந்தோட்டம் | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | பொகவன | டன்சினன் | டயகம மேற் | ஹெல்போட | லெஜர்வத்தை மேற் | |
| 2017 ஆண்டில் நிறைவு செய்த வீடுகளின் எண்ணிக்கை | 04 | 38 | 58 | - | - | 100 |
| 2018 ஆண்டில் நிறைவு செய்த வீடுகளின் எண்ணிக்கை | 96 | 245 | 92 | 98 | 120 | 651 |
| நிர்மாணிப்புக்கள் முடிவுறும் தருவாயிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை | 127 | 48 | - | - | 5 | 180 |
| நிர்மாணிப்புக்கள் பல்வேறு மட்டங்களிலுமுள்ள வீடுகளின் எண்ணிக்கை | 128 | 52 | | 2 | | 138 |
| **மொத்தம்** | **355** | **383** | **150** | **100** | **125** | **1,113** |

### 6.1.2.4 இரண்டாவது கட்டம் (Phase 02)

இதன் கீழ் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மற்றும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு முன்னுரிமை வழங்குவதுடன் 2,887 வீடுகளை நிர்மாணிப்பதற்கு அதற்குரிய பெருந்தோட்டக் கம்பனிகள், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் ஆகியவற்றுடன் இணைந்து நிலங்களை அடையாளம் காணும் பணி இடம்பெற்று வருகின்றது.

## 6.1.3 வீடமைப்புக் கடன் தவணை முறையில் அறவிடல்

பசும்பொன் வீட்டுத்திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற ஒரு வீட்டின் பெறுமதி (மின்சாரம்,குடிநீர், போக்குவரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கு மேலாக) ரூபா 1000,000 மதிப்பீடு செய்ததோடு இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான செலவு பணத்தில் 48% அரசாங்கத்தினாலும் மிகுதி 52% கடன் தொகையாகவும் வழங்கப்படுகின்றது.

## 6.1.4 அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்படும் வீட்டின் வரைபடம்




முன்ப்பக்க தோற்றம்




வீட்டின் வரைபடம்

## 6.2 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

மிகவும் குறைவான வசதிகளின் கீழ் வாழ்ந்துவரும் பெருந்தோட்ட மக்களுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், மலசலகூட வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அடைவுப் பாதைகளை புதுப்பித்தல் / நிர்மாணித்தல், படிகளை அமைத்தல் லைன் அறைகளில் கூரைகளை மீண்டும் பொருத்துதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல், சமய மற்றும் கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் இதன் கீழ் அமுல்படுத்தப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு ஆளான பெருந்தோட்ட மக்களுக்கு தற்காலிக இருப்பிடங்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்தல் மற்றும் அதற்கு தேவையான வசதிகளும் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சின் கீழ் இயங்குகின்ற பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்திப் பொறுப்பு நிதியத்தின் நுவரெலியா, ஹட்டன், பதுளை, கேகாலை, கண்டி, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய பிரதேச அலுவலகங்கள் மூலம் மாவட்ட பிரதேச அலுவலகங்கள் மற்றும் பிரதேச சபை மூலமும் இப் பின்தங்கிய பிரதேசங்களின் சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கான செயற்திட்டஙகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இது தொடர்பாக ரூபா 500 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வாண்டின் டிசெம்பர் மாத இறுதியில் முடிவடையும் போது அதன் நிதிசார் பெறுமதி ரூபா 370 மில்லியன் ஆகும்.

### 6.2.1 2018ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும்

#### 6.2.1.1 கூரைகள் பழுதடைந்து வாழ்வதற்கு தகுதியற்றதாக காணப்படும் லயன் வீடுகளின் கூரைகளை மீண்டும் பொருத்துதல்

அனைத்து பெருந்தோட்ட மக்களுக்குமான வீடமைப்பு என்பது நீண்டதொரு செயற்றிட்டமாக அமைவதால் அதுவரை அவர்கள் வசிக்கும் வீடுகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான இடைக்கால நடவடிக்கையாக இச்செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் 1200 வீட்டு அலகுகளின் கூரைகளை மீளப் பொருத்துவதற்காக ருபா 40 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் ரூபா 39மில்லியன் செலவில் 2017 ஆம் ஆண்டில் பணி முடிவுறாதிருந்த 880 வீட்டு அலகுகள் மற்றும் மேலும் 15வீட்டு அலகுகளின் கூரைகளை மீளப்பொருத்துவதற்காக அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் நிதிசார் மேம்பாடு 98% ஆகும்.

#### 6.2.1.2 சுகாதார ரீதியில் பாதுகாப்பான குடிநீர் வசதிகள்

பெரும்பாலான நீர் ஊற்றுகள் பெருந்தோட்ட குடியிருப்புகள் அமைந்துள்ள பிரதேசங்களில் ஆரம்பமானாலும் பாதுகாப்பான குடிநீர் அவர்களில் சிலருக்கு மட்டுமே கிடைக்கின்றது. குடிநீர் வளங்கள் பாதுகாப்பற்றதாக காணப்படுவதனால் பெருந்தோட்ட மக்கள் நீரின் மூலம் பரவுகின்ற வாந்திபேதி போன்ற நோய்களுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. இவ்வாறாக அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் குடிநீர் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வமைச்சினால் அமுல்படுத்தப்பட்டுள்ள 2016 - 2020 ஆம் ஆண்டை உள்ளடக்கிய தேசிய நடவடிக்கைத் திட்டத்திற்கு அமைவாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 400 நீர் வழங்கல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படவுள்ளதுடன் கீழ் வரும் விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

- புதிய நீர் மூலங்கள் மற்றும் நீரூற்றுக்களை இனங்காணல்
- நீர் மூலங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்காக அதனை அண்மித்த பிரதேசங்களின் எல்லைகளை நிர்ணயம் செய்தல்
- திறந்த வெளியில் மலசலம் கழிப்பதை தவிர்ப்பதற்காக தோட்டங்களில் ஓய்வு நிலையங்களை அமைத்தல்
- நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகட்டல் முறைகளை அறிமுகப்படுத்தல்.
- நீர் மூலங்களை பாதுகாத்தல்
- பயனாளிகளின் பங்களிப்பிலான முறையை அறிமுகப்படுத்துதல் (இது ஏற்கெனவே அமுல்படுத்தப்படுகின்றது)

சுகாதாரப் பாதுகாப்புடன் குடிநீர் வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தினூடாக 50 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 2018 ஆண்டில் ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதற்கமைய 2017 ஆண்டில் முடிவுறாதிருந்த 27 செயற்திட்டங்களுள், 16 செயற்திட்டங்களின் வேலைகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்துள்ளதுடன், மேலும் 11 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 2018 ஆண்டில் புதிய 24 நீர் வழங்கல் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன அதில் இரண்டு செயற்திட்டங்களின் வேலைகள் நிறைவடைந்துள்ளன. 2018.12.31 ஆந் திகதியளவில் நீர் வழங்கல் செயற்திட்டங்கள் தொடர்பாக செலவிடப்பட்ட தொகை ரூபா 20 மில்லியன் ஆவதுடன், அடைந்து கொண்ட நிதிசார் மேம்பாடு 67% ஆகும்.

### 6.2.1.3 துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குதல்

தரவு மீளாய்வு அறிக்கைகளுக்கு அமைய பெருந்தோட்ட மக்களில் 45% வீதத்திற்கு அதிகமானோருக்கு மேம்படுத்தப்பட்ட துப்புரவேற்பாட்டு வசதிகள் கிடைக்கப்பெறவில்லை என்பது அறியக் கிடைத்துள்ளது. லைன் அறைகளில் வாழ்ந்துவரும் இம் மக்களுக்காக போதிய துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்கும் நோக்குடன் 2016 – 2020 ஆகிய ஐந்தாண்டுகளில் 10,000 மலசலகூடங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2018 ஆண்டில், பணி முடிவுறாதிருந்த 293 மலசலகூட நிர்மாணிப்புக்கள் மற்றும் புதிதாக 100 மலசலகூடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக ரூபா 24 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பணி முடிவுறாதிருந்த 209 மலசலகூட நிர்மாணிப்புக்கள் முடிவடைந்துள்ளதுடன், எஞ்சிய 84 மலசலகூடங்களின் வேலைகள் 2019 ஆண்டின் முதலாவது காலாண்டில் நிறைவு செய்யப்படும். 2018.12.31 திகதி துப்புரவேற்பாடு வழங்கும் செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 23 மில்லியன் ஆகும்.

### 6.2.1.4 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நிர்மாணித்தல் / நவீனமயப்படுத்தல்

இலங்கையில் பெருந்தோட்ட துறையின் ஆரம்ப காலம் தொடக்கம் தொழிலாளர்களின் 2-5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் பராமரிப்பு சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. 2 வயதுக்கு குறைந்த குழந்தைகளை பராமரிப்பது மற்றும் 3-5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் சமூக செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல், தாய் மொழி தேர்ச்சி, அழகியற் செயற்பாடுகளையும் புத்திகூர்மையான செயற்பாடுகளையும் அதிகரித்தல், குழந்தைகளை பாடசாலை கல்விக்கு பயிற்றுவித்தல் போன்ற செயற்பாடுகள் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக இடம்பெறுகின்றது. பெருந்தோட்டதுறை சிறுவர்களின் ஆரம்ப பராய சிறுவர் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இடம்பெறுகின்றது. 1,154 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் இயங்கிவருகின்றன.

இடப்பற்றாக்குறை, உபகரண பற்றாக்குறை, முறையான பராமரிப்பு இன்மை, குழந்தைகளை பராமரிப்பவர்களின் மற்றும் ஆசிரியர்களின் திறன் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு 62% நிலையங்கள் “ஏ” மற்றும் “பீ” தரத்திலும் குறைந்த வசதிகளைக் கொண்ட 38% “சீ” மற்றும் “டீ” தரத்திலும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு “சீ” மற்றும் “டீ” தரத்தில் உள்ள 550 இற்கும் அதிகமான சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் காணப்படும் அதேவேளை அவற்றை விரைவில் அபிவிருத்தி செய்யவேண்டியுள்ளது.

அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டில் அமைச்சின் ஊடாக 2020 ஆம் ஆண்டிற்குள் பெருந்தோட்டத்துறை சார்ந்த 100 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன், 2017 ஆண்டின் இறுதியில் ரூ. 22 மில்லியன் செலவில் 28 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

2018 ஆண்டு தொடர்பாக 07 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் முடிவுறா சிறுவர் அபிவிருத்தி 19 நிலையங்களின் மேம்பாட்டிற்காக ரூ. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 2018.12.31 ஆந் திகதியளவில் அதன் நிதிசார் கிரயம் ரூ. 9 மில்லியன் ஆகும்.2018 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியளவில் முடிவடையாத நிலையில் காணப்பட்ட 11 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் 05 நிலையங்களுள் 02 நிலையங்களின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக உலக வங்கியின் செயற்திட்டத்தின் கீழ் (2015-2020) தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அபிவிருத்தி உட்பட ஆரம்ப குழந்தைப்பராய விருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பாக 10 மில்லியன்அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

### 6.2.1.5 தோட்ட வைத்தியசாலை வீதிகள் மற்றும் அடைவுப் பாதைகளை மேம்படுத்தல்.

தேசிய சுகாதார சேவைகளின் நலன்களை பெருந்தோட்ட மக்கள் பெற்றுக்கொள்வதற்குத் தடையாக வீதி வலையமைப்பு முறையே காணப்படுகின்றது. ஆதலால் தோட்டங்களை அண்டியதாக வைத்தியசாலைகள் மற்றும் அதனுடன் தொடர்புபடும் வீதி முறைமையை மேம்படுத்துவது தேசிய செயற்பாட்டுத் திட்டத்தின் விசேட பணியாக இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறே பெருந்தோட்ட பிரதேசங்களில் கரடுமுரடாக உள்ள தோட்ட வீடுகளின் அடைவுப் பாதைகளை அபிவிருத்தி செய்வதும் இவ் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

ஒழுங்கான பாதை அற்ற தோட்ட வைத்தியசாலைகளுக்கு பாதை அமைப்பது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டதோடு 2018 ஆம் ஆண்டில் 200 மில்லியன் நிதி 25 கி.மீ வைத்தியசாலை பாதை அல்லது 20 வைத்தியசாலை பாதைகள் அமைப்பதற்கும் அடைவு பாதைகள் 150 அபிவிருத்தி செய்வதற்கும் ஒதுக்கப்பட்டது. மேலும் எமது அமைச்சினூடாக 275 தோட்ட அடைவு பாதைகள் அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 88 பாதைகள் அபிவிருத்தி செய்து முடிக்கப்பட்டதோடு 12 தொடர் வேலைகளில் 7 முடிவுறுத்தப்பட்டது. 2018 இல் 147 மில்லியன் செலவு செய்ததோடு நிதி முன்னேற்றம் 74% ஆகவும் காணப்பட்டது.

### 6.2.1.6 புதிய வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

புதிய கிராமங்கள் எண்ணக்கருவின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற ஒரு மில்லியன் பெறுமதியான வீடுகளுக்கு ரூபா 200,000 பெறுமதியான உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படுகினறது. இவ்வாறே 150 வீட்டுத்திட்டங்களுக்கு மின்சாரம், குடிநீர், போக்குவரத்து பாதைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2018 இல் 70 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2018 இல் 47 குடிநீர்த் திட்டங்கள் 41 அடைவு பாதைகள் மற்றும் 7 மின்சார திட்டங்கள் முடிவுறுத்தப்பட்டதுடன் நிதி முன்னேற்றம் ரூபா 69 மில்லியன் ஆக காணப்பட்டது. இந்த வருடத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீட்டில் 99% ஆக காணப்பட்டது.

### 6.2.1.7 பொது வசதிகளுக்கான அபிவிருத்தி

பெருந்தோட்டப் பகுதிகளில் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்ற படிக்கட்டுக்கள், வடிகான் முறைமைகளை மேம்படுத்தல், பாதுகாப்பு கட்டுச்சுவர் மற்றும் மதகுகளை அமைத்தல்,விளையாட்டு வசதிகளையும் பெருந்தோட்டட மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியவசியமான ஏனைய வசதிகளையும் விசேடமாக சமய மற்றும் கலாசார நிலையங்கள் போன்றவற்றை கட்டியெழுப்புதல், நலன்புரி நிலையங்களுக்கான உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் இதன் கீழ் இடம்பெறுகின்றது.

2018ஆண்டில் இது தொடர்பாக ரூபா 128 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2018 ஆண்டின் டிசெம்பர் 31 இல் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 64 மில்லியன் ஆவதுடன் அதன் நிதிசார் மேம்பாடு 51% ஆகும். 2015 ஆம் ஆண்டில் இருந்துஇது வரை இவ் அமைச்சினால் பெருந்தோட்ட மக்களின் நலன்புரிச் செயற்திட்டங்கள் உட்பட 1,182 பல்வேறு செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக ருபா 440 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

## 6.2.2 பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்காக 2018ஆண்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டங்கள்(2018.12,31)

| செயற்றிட்டதின் தன்மை | செயற்படுத்தும் நிறுவனம் | | ஒதுக்கீட்டுத் தொகை ரூ.மி. | 2018 ஆண்டிற்கான எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | 2018.12.31செயற்படுத்தப் பட்ட அலகுகளின் எண்ணிக்கை | 2018.12.31 இல் செலவு ரூ.மி. | பௌதீக மேம்பாடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | PH DT | பி.செ. / பி.ச. | | | | | முடிவுறுத்தப் பட்ட | இடம பெறுகின்ற |
| கூரைகளை மீளப்பொருத்தல | √ | - | 40 | 1200 | 895 | 39 | 895 | - |
| நீர் விநியோகம் | √ | √ | 30 | 50 | 51 | 20 | 18 | 33 |
| மலசலகூடம் நிர்மாணித்தல் | √ | √ | 24 | புதிதாக 100 மற்றும் முடிவுறா 293 | 293 | 23 | 209 | 84 |
| சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை நவீனமயப்படுத்தல | √ | √ | 10 | புதிதாக07மற்றும் முடிவுறா 19 | 24 | 09 | 13 | 11 |
| வைத்தியசாலைகளுக்கான வீதி அபிவிருத்தி கருத்திட்டங்கள் | √ | - | 200 | 25 km அல்லது தோட்ட வைத்தியசாலைகளின் எண்ணிக்கை | 12 | 147 | 7 | 5 |
| அடைவுப் பாதைகள அபிவிருத்தி செயற்திட்டம் | √ | √ | | 150 | 275 | | 88 | 187 |
| புதிய வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் | √ | - | 70 | 150 புதிய வீடுகள் பயனாளிகளுக்கு | 95 | 69 | 95 | - |
| விளையாட்டு மைதானங்கள்/ சமய கலாசார நிலையங்கள் / பொது வசதிகள் | √ | √ | 126 | 150 | 150 | 64 | 57 | 93 |
| மொத்தம் | | | **500** | | **1,780** | **371** | **1,367** | **413** |

## 6.3 வாழ்வாதார அபிவிருத்தி

தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றத்துடன் பெருந்தோட்டதுறை பல சவால்களை சந்தித்து வருகின்றது. அதற்கு முக்கிய காரணமாக அமைவது நிகழ்கால சமுதயாம் தற்போது காணப்படும் பாரம்பரிய முறைகளை பின்பற்றுவதில் காட்டும் பின்னடைவு மற்றும் உழைப்புக்கு அதிக ஊதியம், சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் தன்மையை எதிர்ப்பார்த்தல் போன்றனவாகும். இங்கு பாரம்பரிய முறைகளும், குறைவான ஊதியமும் இத்துறை மீதான அவர்களின் ஈடுபாட்டை குறைவடையச் செய்கின்றது. இதன் விளைவு பெருந்தோட்ட சமுதாயம் சமுதாயம் முறையான பயிற்சி மற்றும் திறன் இல்லாமல் வெவ்வேறு நோக்கங்களுடன் தெளிவற்ற எதிர்காலத்திற்குள் பிரவேசிப்பதாகும்.

இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு தோட்ட இளைஞர்களுக்கு தோட்டங்களில் வேலை செய்வதற்கான நல்ல சூழல் மற்றும் மேலதிக வருமானம் போன்றவைகளை ஏற்புடுத்தி கொடுப்பதற்கும் தோட்டங்களுக்கு வெளியே வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொளவதற்கும் ஆயத்தப்படுத்துவதற்கும் 5 வருட தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் மேலதிக கவனம் செருத்தப்பட்டது. இவ்வாறே எமது அமைச்சினால் இளைஞர்களுக்கு பெண்களுக்கும் அபிவிருத்தி தொழில் பயிற்சி வலுவூட்டல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல் போன்ற சமுக வலுவூட்டல் தொடர்பான பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை எமது அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டது.

இத்திட்டங்களுக்காக 2018 இல் ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட தோடு நிதி நடவடிக்கையில் இது ரூபா 51 மில்லியன ஆகும்.

### 6.3.1 2018 ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும்

#### 6.3.1.1 சமுதாயத்தை தெளிவுபடுத்தல்

அதிமேதகு ஜனாதிபதியினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள தேசிய தேவையொன்றாக கருதப்படுகின்ற சுகாதாரம் மற்றும் போசாக்கு நிலைமையை மேம்படுத்தல், சிறுநீரக நோயை கட்டுப்படுத்தல், போதைவஸ்து ஒழிப்பு, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி தோட்டப்புற சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்காக 2015-2017ஆண்டு காலப்பகுதியில் ரூ.12மில்லியன் வரை செலவிடப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் போசாக்கு மட்டுமன்றி எண்ணக்கருக்களை விருத்தி செய்வதன் மூலம் அவர்களை சிறந்த திசையில் கொண்டு செல்வதற்கு இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய அலுவலகங்களின் ஊடாக சுழல் மற்றும் நீர் மூலங்களைப் பாதுக்காக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

2018 ஆண்டில் 1,000 விழிப்பணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ரூ.15மில்லியன் நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. 2018 டிசெம்பர் மாத இறுதி வரை அவ்விலக்கினை அடைந்து கொள்ளும் பொருட்டு ரூ. 5.5 மில்லியன் செலவிடப்பட்டு 553 நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### 6.3.1.2 வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்

பலமிக்க பொருளாதார சக்தியுடன் கூடிய மக்கள் சமுதாயத்தை கட்டியெழுப்பி, ஐக்கிய நாடுகளின் பேண்தகு அபிவிருத்தியின் முதற் கட்டமாக வறுமை ஒழிப்புக்காக அதிமேதகு ஜனாதிபதியின் பேரார்வத்திற்கு அமைய 2030 ஆம் ஆண்டளவில் வறுமை நிலையற்ற இலங்கையை உருவாக்கும் நோக்குடன், 2017 ம் ஆண்டு " வறுமை ஒழிப்பு ஆண்டு" என பிரகடனப்படுத்தப்பட்டது.அமைச்சினால் இந் நிகழ்ச்சித்திட்டத்தை சாத்தியமான வகையில் சுயதொழில் சுழற்சி நிதியத்தின் கீழ் கடன் வசதி வழங்குவது தொடர்பாக ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டது.

உயர் வறுமை சுட்டிக்கு உரிமை கோரும் பெருந்தோட்ட மக்களை இலக்காகக் கொண்டு சுயதொழில் அபிவிருத்தி, உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு, சிறிய அளவிலான வீட்டுத்தோட்டம், வீடுகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் வீட்டுத் தோட்டம் வளர்த்தல், நன்னீர் மீன் வளர்ப்பு, மற்றும் கைவிடப்பட்ட நிலங்களில் பயிர்ச்செய்கை போன்ற 250 வெவ்வேறு செயற்றிட்டங்களுக்காக அமைச்சினால் 2018 ஆம் ஆண்டில் ரூ.10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ் 101 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் நிதிமேம்பாடு ரூபா 2.5 மில்லியனாகும்.

### 6.3.1.3 பெருந்தோட்டச் சிறுவர்களுக்கான உப உணவுத் திட்டம்

ஜனாதிபதி காரியாலயத்தின் வழிகாட்டுதலின் கீழ் சுகாதர மற்றும் போசணை பணிமனையினால் தயாரிக்கப்பட்டுள்ள போசாக்கு தொடர்பான பல் துறை தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் (2017 – 2020) ஊடாக இவ்வமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கு அமைய சிறுவர் மந்தபோசணை தொடர்பாக உயர் சுட்டிகளை காண்பிக்கும் பெருந்தோட்டத்துறை சிறுவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டத்தின் ஓர் அங்கமாக பெருந்தோட்டத் துறையில் 3-5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உப உணவை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் இவ்வமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"டிகிரி சக்தி" என்று பெயரிடப்பட்டுள்ள இவ் அதிபோசாக்கு உப உணவானது 3-5 வயதிற்குட்பட்ட 40,000 சிறுவர்களை இலக்காகக் கொண்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் 7 பிராந்திய காரியாலயங்களின் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக சிறந்த வழிகாட்டுதலை அப்பிரதேசங்களைச் சேர்ந்த குடும்ப நல உத்தியோகத்தர்கள் வழங்கிவருகின்றனர்.

2017 ஆம் இறுதி காலாண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூ.65 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் "டிகிரி சக்தி" போசாக்கு பக்கற்று பயனாளி சிறுவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டமாக இடம்பெற்று வருகின்றது. 2018.12.31 ஆம் திகதி முடிவில் இதற்காக ரூ.43.5 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

### 6.3.1.4 பெருந்தோட்டச் சமுகம் தொடர்பான தரவுத்தளத்தை சேகரித்தல்

பெருந்தோட்டச் சமுகம் தொடர்பாக அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது இச்சமுகம் தொடர்பான சரியான தகவல்கள் இல்லாததோடு அந்த அபிவிருத்தி திட்டங்கள் முழுமையாக செயற்படுத்த தடையாக இருக்கின்றது என நிருப்பிக்கட்டுள்ளது. பெருந்தோட்டத் துறையின் பல்வேறு அமைச்சுக்கள் அபிவிருத்திட்டங்களை அமுல்ப்படுத்திய போதும் பெருந்தோட்டத் துறையின் தகவல்களின் பற்றாக்குறை காரணமாக அச்சமுகத்தின் தரவுத்தளங்கள் பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளது.

பெருந்தோட்ட சமுகத்தின் பொருளாதார வளர்ச்சியை ஸ்தாபிப்பதற்கு இந்த அமைச்சின் மூலம் அக்குறைப்பாடுகளை அறிந்துக் கொண்டு தரவுத்தளத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கை தகவல்

தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் திணைக்களத்தினூடாக மென் பொருள் செயல்ப்படுத்த தேவையான தொழில்நுட்ப வழிக்காட்டலை வழங்குகினறது. நில அளவை திணைக்களத்தில் இருந்து தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளும் பணியை ஏற்க்கனவே அமைச்சு முடித்தவிட்டப்போதிலும் நிலவும் சூழ்நிலையின் கீழ் தேவையான தகவல்களை பெறமுடியாததால் அந்த ஆண்டின் இறுதிக்குள் தரவுத்தளத்தை முடிக்கமுடியவில்லை.

## 6.3.1 2018 நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்வாதார நிகழ்ச்சிகளில் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் (2018.12.31)

| திட்டம் | நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் | | ஒதுக்கீடு ரூ.மி. | 2018 - க்கான இலக்கு | 2018-12-31 நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 2018-12-31 செலவு ரூ.மி. | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|---|---|
| | பெ.ம. அ. நி. | பி.தே. செயலகம், பி.தே. சபை | | | | | |
| மக்களுக்கு தெளிவூட்டும் நிகழ்ச்சி | √ | √ | 15 | 1000 நிகழ்ச்சிகள் | 553 | 5.5 | 553 (55%) |
| வறுமை ஒலிப்பு திட்டம் | √ | √ | 10 | 250 நிகழ்ச்சிகள் | 101 | 2.5 | 101 (40%) |
| மேலதிக போஷாக்கு உணவு கொடுத்தல் | √ | - | 65 | 40000 பிள்ளைகளுக்கு 6 மாதங்களுக்கு | 40000 பிள்ளைகளுக்கு 4 மாதங்களுக்கு பெற்றுக் கொடுத்தல் | 43.4 | 04 மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டது (100%) |
| தகவல் திரட்டுதல் | இலங்கை தொழிநுட்ப நிலையம் (ICTA) Price Watercoop நிலையம் மற்றும் திட்டமிடல் பிரிவு | | 10 | தரவு தளத்தின் மென்பொருள் தயாரிப்பு முடிவுருத்தல் | மென்பொருள் தயாரிப்பின் ஆரம்ப நிலையை முடிவுருத்தல் | 0.10 | (35%) |
| **மொத்தம்** | | | **100** | | | **51.5** | |

# 7. நிலைபேண் அபிவிருத்தி தொடர்பாக அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றம் (2018.12.31)

| நிகழ்ச்சித் திட்டம் | நிலைபேண் அபிவிருத்தி குறிக்கோள் | | ஒதுக்கப்பட்ட நிதி | செலவு |
|---|---|---|---|---|
| மலைநாட்டு புதிய கிராமங்களுக்கான வீடமைப்பு | 11.1<br>1.5.1<br>1.4 | 2030 ஆம் ஆண்டில் அனைவருககும் போதுமான பாதுகாப்பான வீடுகளை அமைப்பதையும் அவற்றை மேம்படுத்துவதையும் உறுதிப்படுத்துதல்.<br>2030 ஆம் ஆண்டளவில் வறிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மக்களின் சமூக பொருளாதார சூழல் பாதிப்புகளை குறைப்பதை உறுதிப்படுத்துதல்<br>2030 ஆம் ஆண்டளவில் சகல ஆண் பெண் வறிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான மக்களை பொருளாதார, நில உரிமை மற்றும் அடிப்படை வசதிகளை சமமான முறையில் பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்துதல். | **2,090 (11+17)**<br>**587 (13)** | **1,240 (11+17)**<br>932 (13) |
| பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 6.1<br>6.2<br>4.2<br>11.2<br>7.1.1 | 20130 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சமமான முறையில் குடிநீர் வசதிகளை பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் சிறந்த மலசலகூட மற்றும் சுத்திகரிப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துதல்.<br>2030 ஆம் ஆண்டளவில் சகல ஆண் பெண் சிறுவர்களுக்கும் ஆரம்ப பராய சிறுவர் அபவிருத்தியை உறுதி செய்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பான, வினைத்திறனான போக்குவரத்து தொகுதியை அமைத்துக் கொடுத்தல் மற்றும் வீதி பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்<br>மின்சாரம் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துதல் | **500** | **370** |
| வாழ்வாதார அபிவிருத்தி | 1.2<br>2.2<br>4.3<br>4.5<br>8.6 | 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் தேசிய சுட்டிகளுக்கு அமைய வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் தொகையை குறைந்தது பாதியளவிலேனும் குறைத்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் ஆண் பெண் சகலருக்கும் சிறந்த தொழில்நுட்ப கல்வி தொழில் கல்வி பெற்றுக்கொள்வதற்கான சம வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல் (பல்கலைக்கழக அனுமதிக்கான சம வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல்)<br>2030 ஆம் ஆண்டளவில் ஆண் பெண் அனைவருக்கும் சமமான தொழிற்பயிற்சி வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்துதல்<br>2020 ஆண்டளவில் தொழில், கல்வி, பயிற்சி என்பவற்றில் ஈடுபடாதவர்களின் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அளவில் குறைத்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் மந்த போசனை நிலையை குறைப்பதற்கும் 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் வயதுக்கு ஏற்ற உயரம் இல்லாமை உயரத்திற்கு ஏற்ற பருமன் இல்லாமை தொடர்பான இலக்குகளை 2025 ஆம் ஆண்டளவில் அடைதல் | 115 (17)<br>94 (13) | 53 (17)<br>(13) |
| | | | 3,386 | 2,595 |

# 8 அமைச்சின் ஊடாக 2018 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட விசேட வெற்றிகள்

## 8.1 10,000 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காக இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்துக் கொள்ளல்

2017 ஆம் ஆண்டு மே மாதம் இந்திய பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களின் இலங்கை விஜயத்தின் போது உறுதியளிக்கப்பட்டபடி பெருந்தோட்டச் சமுகத்திறகு 10,000 மானிய வீட்டுத்திட்டத்திறகான உடன்படிக்கை 12.12.2018 இல் கைசாத்திடப்பட்டது.

## 8.2 பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை ஒன்றை உருவாக்குவதற்ககான சட்டமூலம் அங்கிகரிக்கப்பட்டமை

இவ்வமைச்சின் புதிய கிராம எண்ணங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு தோட்டப்பகுதிகளில் நடைமுறைப்படுத்தடும் திட்டங்களை உத்வேகப் படுத்தும் முகமாக 2018 ஆம் வருட 25.06.2018 ஆம் திகதிய 32 இலக்க பாராளுமன்ற சட்டமூலத்தின் கீழ் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை உருவாக்குவதற்கான ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டத.

# 9 அமைச்சின் பரப்பெல்லையின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

## 9.1 பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமிய அபிவிருத்தி அதிகார சபை

இந்த அமைச்சின் பிரதான நோக்கங்களுள் ஒன்றான "புதிய கிராம எண்ணக்கரு" வினை நடைமுறைப்படுத்துவதைப் பிரதான அபிலாசையாகக் கொண்டு தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்திப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றும் நோக்கில் அமைச்சுடன் இணைந்த அதிகார சபை ஒன்றை தாபிப்பதற்கான தேவை உருவாகியது. அதன் பிரகாரம் 2018.06.25 ஆம் திகதி "**பெருந்தோட்ட வலயத்திற்கான புதிய கிராமிய அபிவிருத்தி அதிகார சபை**" யினை தாபிப்பதற்கான 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அச் சட்டத்தின் பிரகாரம்,அதிகாரசபை அமைக்கப்பட்டுள்ளது.

### 9.1.1 அதிகார சபையின் நோக்கங்கள்

1. பெருந்தோட்ட வலயத்தின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதனூடாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தினரைப் பிரதான சமூக நீரோட்டத்திற்கு கொண்டு வருவதை உறுதி செய்தல்.
2. இனம் காணப்பட்ட பிரதேசங்களில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தை தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யுக் கூடியவாறு சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வலுவடையச் செய்தல்.

### 9.1.2 அதிகார சபையின் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள்

1. பெருந்தோட்டப் பகுதிகளில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக அரசாங்கத்தின் திட்டம், நிகழ்ச்சித் திட்டம் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
2. அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பெருந்தோட்டப் பகுதியின் ஏனைய தேசிய, மாவட்ட ரீதியில் மற்றும் பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
3. புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயாரிக்கும் போது பெருந்தோட்டப் பகுதிகளின் சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்களின் பங்களிப்பினை உறுதி செய்தல்.
4. பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள வீடுகளின் சட்ட ரீதியான குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை வழங்குவதற்கான உறுதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இளைஞர் சமூகத்தினரின் கல்வி விருத்திக்காக மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

6. பெருந்தோட்ட சமூகத்தினருக்கான அத்தியவசிய சேவைகளை வழங்குவதனை இலகுபடுத்துவதற்காக மாகாண சபைகள் அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்களின் பிரதேச மட்டத்திலான அலுவலகங்களுடன் அணைந்து பணியாற்றல்.

7. பெருந்தோட்ட சமூகத்தினருக்கான மாற்று வாழ்வாதார சந்தர்ப்பங்களை மேம்படுத்தல் மற்றும் அது தொடர்பாக தேவையான வழிகாட்டல் மற்றும் உள்ளீடுகளை வழங்குதல்.

8. தமது வாழ்வாதார சந்தர்ப்பங்களை கட்டியெழுப்புவதற்காக பெண்கள், சிறுவர்கள், வயது வந்தோர்கள் மற்றும் விசேட தேவைகளைக் கொண்ட நபர்கள் உள்ளிட்ட பெருந்தோட்டத் துறையின் பல்வேறு சமூகக் குழுக்களை வலுவடையச் செய்தல்.

9. பெருந்தோட்டப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகளில் சட்ட ரீதியான குடியிருப்பாளர்களின் வழிவந்தவர்களுக்கும் அந்த சட்ட ரீதியான குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

10. பெருந்தோட்டப் பகுதிகளின் பூமி மற்றும் நீர் மூலங்களின் பௌதிக நிலைமை பாதிக்கப்படுவதைக் குறைத்தல் மற்றும் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில் நிவாரண மற்றும் பரிகாரம் ஆகிய இரு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தல்.

11. தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் வினவி இனம் காணப்பட்ட பிரதேசங்களில் அவதானமான பிரதேசங்களை இனங் காணல் மற்றும் வதிவிடத் தேவைக்காக சட்ட விரோதமாக குடியேறுவதிலிருந்து பாதுகாத்து அவற்றைப் பயனுள்ள மாற்றுப் பயன்பாட்டுக்குப் பயன்படுத்தல்.

12. பெருந்தோட்ட பகுதிகளில் போதியளவு சமூக சேவை வசதிகள் மற்றும் நிலைபேறான உட்டகட்டமைப்பு வசதிகள் வழங்குவதை மேம்படுத்தல்

## 9.1.3 அதிகார சபையின் முகாமைத்துவம்

பெருந்தோட்டப் பகுதிகளுக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவத்திற்காக பதவி வழியாக நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 07 ஆகும்.

1. மத்திய மலைநாட்டு கிராம, உட்டகட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

2. நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

3. பெருந்தோட்ட விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

4. பொது தொழில் முயற்சிகள் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

5. மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

6. வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

7. காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளரினால் பெயரிடப்படும் அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர்.

அதற்கு மேலதிகமாக மத்திய மலைநாட்டு புதிய கிராம, உட்டகட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, நிதி மற்றும் மாகாண நிர்வாகம், ஆகிய துறைகளில் நிபுணத்துவமுள்ள நபர்களிலிருந்து நியமிக்கப்படும் ஆறு அங்கத்தவர்களும் இந்த முகாமைத்துவ சபையில் உள்ளடங்குவர். இதில் ஓர் அங்கத்தவர் பெருந்தோட்டக் கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தினால் நியமிக்கப்படல் வேண்டும். அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களிலிருந்து அதிகார சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் ஆகிய இருவரும் நியமிக்கப்படுவர்.

‘‘பணிப்பாளர் நாயகம்’’ அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார் என்பதுடன் அவர் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நிர்வாக சபையின் பரிந்துரைக்கு அமைய நியமிக்கப்படுவார். பணிப்பாளர் நாயகம் பணிக்குழாத்தின் நிர்வாகம் உள்ளிட்ட அதிகார சபையின் நடவடிக்கைகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக பணியாற்ற வேண்டியதுடன் சபையின் அனைத்து தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் பொறுப்புக் கூற வேண்டும். அவ்வாறே சபையினால் அவரிடம் ஒப்படைக்கப்படும் அனைத்து பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் அவர் கட்டுப்பட்டுள்ளார் என்பதுடன் சபையின் செயலாளராகவும் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராகவும் பணியாற்றுதல் வேண்டும்.

## 9.1.4 அதிகார சபையின் நிதி நடவடிக்கைகள்

அதிகார சபைக்குச் சொந்தமாக நிதியம் ஒன்று காணப்படல் வேண்டும் என்பதுடன் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக காணப்படல் வேண்டும். 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வுத் தரச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அரச கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், அதிகார சபையின் கணக்காய்வு தொடர்பில் ஏற்புடையதாக அமைதல் வேண்டும்.

ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களுக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளரின் அறிக்கை, எதிர்வரும் ஆண்டுக்காக உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கி தயார் செய்யப்பட்ட ஆண்டறிக்கை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். அமைச்சரினால் அவ் அறிக்கை கிடைக்கப் பெற்று ஆறு மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 9.2 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்

### 9.2.1 பின்னணி

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் வாழ்வாதார வழிமுறைகளை மேம்படுத்துவதற்காக முதலில் "தோட்டப்புற வீடு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம்" என்ற பெயரிலான ஒரு நிறுவனமாக 1982இன் 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1992 செப்டெம்பர் மாதம் 18ஆந் திகதி தாபிக்கப்பட்ட கம்பனியொன்றாகும்.

1992 இல் அரசின் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கமைய மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களை கையகப்படுத்தி அப் பெருந்தோட்டங்களின் முகாமைத்துவம் 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளிடம் கையளிக்கப்பட்டன. தனியார்மயப்படுத்தப்பட்டு சில காலங்களுக்குப் பின்னர்,2002 ஒக்டோபர் மாதம் 25ஆந் திகதி,மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சமூகப் பிரிவுகளை ஒன்றிணைத்து பெருந்தோட்ட பிரிவில் வசிக்கின்னற மக்களின் சுகாதார மற்றும் ஏனைய சமூக நலன்புரி, வாழ்வாதார வழிவகைகளை மேம்படுத்தும் பொருட்டு,,,தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திப் பொறுப்பு நிதியம், "பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம்", என பெயர் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டது. தற்போது இந்த நிதியம் 2007ஆம் ஆண்டின் 07 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தோட்டப்புற சமுதாயத்தின் லயன் அறைகளுக்கு பதிலாக தூய உறுதியுடன் கூடிய தனி வீடுகளை தகுதி வாய்ந்தவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்
- பழைய லயன் அறைகளை புதுப்பித்தலும் அவற்றின் கூரைகளை மீளப்பொருத்தலும்
- நீர் விநியோகம் மற்றும் துப்புரவேற்பாட்டு வசதிகளை மேம்படுத்தல்
- சிறுவர் அபிவிருததி நிலையங்களைத் தாபித்தல் ' மற்றும் தகுதி வாயந்த் சிறுவர் அபிவிருத்தி அலுவலர்களை இணங்காணல்
- சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல் (வீதி ∴ கட்டிடம் ∴ சமய நிலையங்கள் போன்றன)
- சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளும்
- சந்தைப்படுத்தல் வசதிகளுக்கான நடவடிக்கைகளை செய்துகொடுத்தல்
- வாழ்வாதார வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

## 9.2.2 நிறுவன ஒழுங்கமைப்பும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களும்

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியமானது மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. இது பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை கட்டியெழுப்பும் பொருட்டு நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்து அதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்காக செயற்படுகின்ற, இலங்கைஅரசு, பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தோட்டத்துறை தொழிற்சங்கங்களை உள்ளடக்கிய முத்தரப்பினரைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் தோட்டத்துறை தொழிலாளர்களின் நலனுக்கான உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பலவற்றை அமுல்படுத்தும்போது அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், தொழிற்சங்கள், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் வேறு உள்நாட்டு அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கௌரவ அமைச்சரினால் நியமனம் செயயப்படுகின்ற தவிசாளர் மற்றும் இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கொண்ட பணிப்பாளர் சபையின் கீழ் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் இயங்கிவருகின்றது. காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்கள் 7இன் ஊடாக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகள் வலுவூட்டப்படுகின்றன. பிராந்திய பணிப்பாளர் சம்பந்தப்பட்ட பிராந்திய அலுவலகத்திற்கு தலைமை தாங்குவதுடன் தொழில்நுட்ப நிதிசார் மற்றும் முகாமைத்துவப் பதவியணியினர் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

## 9.2.3 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிரதேச கட்டமைப்பு

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்தியக் கட்டமைப்பு



## 9.2.4 தோட்டத் தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கம்

தோட்டத் தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்து 1993இல் தாபிக்கப்பட்டது. பிரதானமாக வீடமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள இந்த சங்கங்கள் தற்போது பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்ற 435 தோட்டங்களை மையமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

இந்த கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பாலானவை முன்னோடி சமுதாய அடிப்படையிலான அமைப்புகளாக நாட்டில் தாபிக்கப்பட்டுள்ளன. இவை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பிராந்திய அலுவலகங்களின் கண்காணிப்பின் கீழ் தகவுதிறன்களின் அடிப்படையிலான உயர் தரப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்ச்சியாக கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த சங்கங்கள் “தோட்ட தொழிலாளர் வீடமைப்புக் கூட்டுறவுச்சங்க வங்கி” என்ற பெயரில் அவர்களினது வங்கியின் ஊடாக தமது நிதியை உழைத்துக்கொள்வதுடன் கடன் வழங்கும் நடவடிக்கையையும் மேற்கொள்கின்றது.

கடன் வழங்குவதற்கு மேலதிகமாக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி தோட்டங்களில் வசிப்பவர்களின் சேவைசார் தேவைகளுக்கான இலகு அணுகு முறைகளை செய்து கொடுத்து தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை பொருட்கள் ∴ நலன்புரி வர்த்தக நிலையங்கள், சிகை அலங்கார நிலையம், தொடர்பாடல் நிலையங்கள் போன்ற வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வசதி செய்துள்ளது. தோட்ட வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கைத்தரம், அவர்களின் சுகாதாரம், போசாக்கு, சுகாதார வசதி மற்றும் சுத்தம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு அவர்களுக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் இலகுவாக அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு தோட்ட ஊழியர் வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கங்களை தமது துணைப்பிரதிநிதிகளாக பயன்படுத்தி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பல்தேசிய கம்பனிகள் மற்றும் வேறு முன்னோடி தனியார் துறை அமைப்புக்களுடன் கூட்டாக செயற்படுகின்றன.

## 9.2.5 பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் / கருத்திட்டங்கள்

இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக சிறந்ததொரு பணியினை நிறைவேற்றும் பெருந்தோட்ட சமூகத்தின் சமூக பொருளாதார துறையின் மேம்பாட்டுக்காக பெருந்தோட்டப் பகுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அத்தியாவசியமான ஒரு தேவைப்பாடாக மாறியுள்ளது. இத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு தலைமை வகித்துச் செயற்படுவதுடன் அதன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் முக்கியமான பங்காளிகளாக பெருந்தோட்ட மானுட அபிவிருத்திப் பொறுப்பு நிதியம் செயற்படுகிறது.

அதன் பிரகாரம் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டுக்காக பெருந்தோட்ட சமூகத்தை இலக்காகக் கொண்ட 1,566 புதிய வீடுகளை நிர்மாணிப்பதற்காகவும் நிர்மாணிக்கப்பட்டு வந்த 1,567 வீடுகளின் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்திப் பொறுப்பு நிதியம் நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது. இந்த வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வீடு ஒன்றுக்கு 6% நிர்வாகப் படி அமைச்சினால் வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக பின்தங்கிய பிரதேசங்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்திப் பொறுப்பு நிதியம் அதிக பங்களிப்பை வழங்குகின்றது. அவ்வாறே, குழந்தைகளின் போசாக்கின்மையை குறைப்பதற்காக அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட "டிக்கிரி சக்தி" மேலதிக போசாக்கு எனும் நிகழ்ச்சித் திட்டமும் பெருந்தோட்ட மானுட அபிவிருத்திப் பொறுப்பு நிதியத்தினூடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 3– 5 வயது வரையான சுமார் 40,000 குழந்தைகளை இலக்காகக் கொண்டு பெருந்தோட்ட மானுட அபிவிருத்திப் பொறுப்பு நிதியத்தின் மேற்பார்வையின் கீழ் தோட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்களினூடாக சிறுவர்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

